# பாட்டுக்கு இலக்கணம்

பாரதிதாசன்

591

# பாட்டுக்கு இலக்கணம்

*பாவேந்தர்*
**பாரதிதாசன்**

பூம்புகார் பிரசுரம் பிரஸ்
63, பிராட்வே,
சென்னை-600 001.

விலை ரூ. 3-50

பூம்புகார் வெளியீடு எண் : 140

முதற் பதிப்பு : அக்டோபர், 1980

உரிமை : புரட்சிக் கவிஞரின் தலைமகள் சரசுவதி-கண்ணப்பன்; மகன் மன்னர் மன்னன்; இளைய மகள் வசந்தா தண்டபாணி ஆகியோர் உரிமை இந் நூல். எவர் இந்த நூலில் உள்ளவற்றை முழுதாகவோ - பகுதியாகவோ - கருத்துரையாகவோ எடுத்தாள விரும்பினாலும் உரிமை உடையவர்களிடம் முன்இசைவு பெறுதல் வேண்டும்.

அச்சிட்டவர்கள்: பூம்புகார் பிரசுரம் பிரஸ், சென்னை - 600 001.

## நல்ல தமிழ் வளர !

**நா**ம் இயற்றிய பாடல் வரி ஒவ்வொன்றும் பிழையின்றி அச்சேறுகிறதா என்பதில் மிகுந்த கருத்தூன்றுவார் பாவேந்தர்.

பெரும்பாலும் அச்சகங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர், பிழையற்ற தமிழ் வளர அளப்பரிய தொண்டு புரிந்தவர்.

பிழையிருந்தால் ஒரு சிறிதும் பொறுத்துக் கொள்ள மாட்டார்.

அச்சுப் பிழைக்கே இப்படி எனில், இலக்கணப் பிழை இருந்தால் அவர் பொறுத்துக் கொள்ளுவது எப்படி? தம் பொறுப்பில் நடத்திய இதழ்கட்கு வெளியார் எழுதும் பாடலில் பிழை இருந்தால் செப்பஞ் செய்தே வெளியிடுவார்.

''ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்'' எனும் முழுதும் கவிதையிலான இதழை முதன் முதலாக நம் நாட்டில் வெளியிட்ட காலத்தில், பிறர் எழுதியனுப்பிய கவிதைகளில் காணப்பட்ட பிழைகளைத் திருத்தியே வெளியிட்டார்.

ஆசிரியப் பயிற்சிக்கு நம் கவிஞர் நடத்திய மாலை நேர வகுப்புகளில் கடினமான இலக்கண விதிகளைக் கன்னற் சுவையாக ஊட்டினார்.

அப்படி மிகக் கடுமையாக இலக்கண விதிமுறைகளைக் கடைப்பிடித்த கவிஞர் எதிரில், சிலர் பிழைமலிந்த பாடலைக் காட்டிச் சிறப்புரை கேட்டு நின்றால் சீறி விழுவார்.

சீற்றம் மட்டுமல்ல, செயல்படுத்த வேண்டிய விதி முறைகளைக் கற்பிக்கவும் முற்படுவார்.

இலக்கணப் பிழையற்ற பாடல்களை இயற்றும் வழி முறையினை எழுதுவார்க்கு அறிவுறுத்தும் முயற்சியாகப் பாடம் பலவற்றைக் கட்டுரை வடிவில் அளித்து வந்தார்.

அவற்றின் நூல் வடிவமே இது. பாட்டு ஒன்று பிறக்கும்போதே இசையோடும் இலக்கணத்தோடும் பிறக்கிறது என்பதற்கு அவரின் படைப்புகளே சான்று பகரும். தமிழ் மொழி வளர்ச்சிக்கு இந்த நூல் பெரிதும் உதவும் என்பதால் இதனை வெளியிடுகிறோம்.

எமது முயற்சிக்குத் துணைவலி சேர்க்கும் பூம்புகார் பிரசுரத்தார்க்கும், இந்நூலை தொகுத்தளித்த டாக்டர் ச.சு. இளங்கோ அவர்களுக்கும் உங்கள் சார்பில் நன்றி!

18–4–81 —**மன்னர் மன்னன்**

## அணிந்துரை

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்களில் இலக்கண நெறியோடு பாட்டெழுத வேண்டும் என்ற கருத்துடையவர் பாரதிதாசன்.

அகவல், வெண்பா, பஃறொடை வெண்பா, கட்டளைக் கலித்துறை, கலிவிருத்தம், கலிவெண்பா, எண்சீர், அறுசீர், நாலடித்தரவு கொச்சகம் இணைக்குறள் ஆசிரியப்பா முதலான பா, பாவினங்களையும் தாலாட்டு, தெம்மாங்கு, கும்மி, ஆனந்த களிப்பு, சிந்து, சிந்துக்கண்ணி, காவடிச்சிந்து, நொண்டிச்சிந்து போன்ற இசைப்பாடல் வடிவங்களையும் பாரதிதாசன் தன் படைப்புகளில் கையாண்டுள்ளார்.

பாடல் எழுத விரும்புவோர் யாப்பிலக்கண மரபுகளை அறிதல் வேண்டும் என்பதில் அழுத்தமான கருத்துடையவர். ''கவிஞன் ஆவதற்கு இலக்கணம், இலக்கியம் ஒன்றும் படிக்க வேண்டாமென்று சிலர் சொல்கிறார்கள்; அப்படியல்ல. அவற்றைக் கட்டாயம் படித்துத்தானாக வேண்டும்'' (கவிஞர் பேசுகிறார் ப. 5) என்பது பாரதிதாசன் கருத்து.

''இலக்கண இலக்கியங்களைக் கவிஞர்கள் நேர்டியாகக் கற்று அறிவு பெற்று புதிய படைப்புகளைச் செய்ய வேண்டும்'' என்பது பாரதிதாசன் நோக்கமாயினும்—இலக்கண நூல்களை நேரடியாகக் கற்று அறிவு பெறுவதற்கு ஒப்பவே, ஒருவர் இலக்கியங்களைக் கற்றும் அவ்வாறான இலக்கண அறிவு பெற முடியும் என்றும் அவர் கருதியுள்ளார்.

தொடக்க நிலையில் பாட்டெழுத விரும்பித் தன்னை அணுகியவர்களிடம் 'குமர குருபரரின்'—கந்தர் கலிவெண்பா

நூலினை நன்கு படிக்குமாறு பாரதிதாசன் ஆற்றுப்படுத்தியுள்ள செய்தி ஈண்டு நினைக்கத் தக்கது.

பொதுவாகக் கவிஞர்கள் மட்டுமல்லாமல் எழுத்தாளர்களும் இலக்கண இலக்கியத்தில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

...''இலக்கணமும் இலக்கியமும்
தெரியாதான் ஏடெழுதல்
கேடு நல்கும்''...(தமிழியக்கம், ஏடெழுதுவோர் 2: ப.43)

என்று எழுத்தாளர்கள் இலக்கண இலக்கிய அறிவு பெறுதலைத் தமிழியக்கத்தில் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

'புரட்சிக் கவி'யில் தமிழ்க் கவிஞன் உதாரன் பாப்புனைவதற்குரிய பலவகை அனுபவங்களை அமுதவல்லிக்குச் சொல்லிக் கொடுக்கிறான். அவற்றில் யாப்பு முறையும் ஒன்று என்பது ஈண்டு எண்ணத்தக்கது.

''இலக்கணம் எனும் தமிழ்ச்சொல் 'லக்ஷணம்' என்னும் வடசொல்லின் திரிபு என்பார் கூற்றை மறுத்து பாரதிதாசன் இலக்கம் தமிழ்ச்சொல்லே என்று சான்றுகளுடன் நிறுவியுள்ளார். அப்பகுதி வருமாறு:

இலக்கம்—குறி; அஃதாவது, ஒருவன் எந்த இடத்தில் அம்புவிட வேண்டுமோ அந்த இடம் இலக்கம்; எந்த இடத்தை அடைய வேண்டுமோ அந்த இடம் இலக்கம்.

இலக்கம் தூய தமிழ்ச்சொல். 'எல்லே இலக்கம்' என்பது தொல்காப்பிய நூற்பா. இனி அந்த இலக்கம் என்பது அம் என்ற சாரியை குறைந்து இலக்கு என நிற்பதும் அணம் என்பதைச் சேர்த்துக் கொண்டு இலக்கணம் என நிற்பதுண்டு.

(இலக்கு+அணம்) இலக்கணம் என்றால் அதன்பொருள் இலக்கை நெருங்குவது என்பதாம்.

அணம்—அணுகுவது; ஈறு திரிந்த ஆகுபெயர் என்பார்கள் இதை. 'அண' என்று மட்டும் இருந்தால் என்ன பொருள் எனில் நெருங்க என்பது. இது செய எச்சம். (இலக்கு+அண) இலக்கண என்றால் இலக்கை நெருங்க என்று பொருள்.

இவ்வாறு சொற்றொடர் ஆட்சியில் வந்துள்ளதா எனில், மணிமேகலையில் 30—வது 'பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற கதை' 18வது அடியில்,

'இலக்கணத் தொடரில்' (இலக்கு+அண) என வந்துள்ளது காண்க.

'சொற்றகப்பட்டும் இலக்கணத் தொடர்பால்' என வந்துள்ளது. இவற்றால் இலக்கணம் என்பது தூய தமிழ்ச் சொற்றொடர் என்பது பெற்றோம்''

(குயில், குரல் 1, இசை 2: 8.6.58)

தமிழ் யாப்பு மிகவும் நெகிழ்ச்சியுடையது; இறுக்கமானது, கடினமானது என்பார் கூற்றுகள் ஆய்வு நோக்கில் ஏற்றுக் கொள்ளத்தக்கவையல்ல. பா வகையில் வெண்பா மட்டுமே அதற்குரிய தளைகளைப் பெற்றுவரும். ஏனைய பாக்களுக்கு இவ்வரையறை இல்லாமல் போவதும் தமிழிசை, துறை, விருத்தம் முதலிய பாவினங்களுக்குத் தளை வரையறை போன்றவை இல்லாமல் அமைந்துள்ளமை தமிழ் யாப்பின் நெகிழ்ச்சிப் போக்கை வெளிப்படுத்தும்.

தமிழ் யாப்பு காலந்தோறும் மாறியும் வளர்ந்தும் வருகிறது. சங்கப் புலவர்களை நோக்கக் கம்பனும், கம்பனை நோக்கப் பாரதியும் மாறிவரும் யாப்பிலக்கணத்திற்கு எடுத்துக்காட்டுகளாகின்றனர்.

அம்மரபில் வந்த பாரதிதாசனும் புதுப்புது ஓசையொழுங்கில் யாப்புக் கட்டுக்கோப்பில் பாடல்கள் புனைந்துள்ளார்.

பாரதிதாசன் எழுதிய இந்த நூலும் தமிழை இலக்கண நெறியோடு எழுதுவதற்குத் துணை செய்யும். எடுத்துக்காட்டுக்கு ஒன்று:

''பல குதிரைகள், பல பேர்கள், பல தேர்கள், சில குதிரைகள், சில பேர்கள், சில தேர்கள்,

சிலர், பலப்பேர், சிலக் குதிரைகள் என்று பிழையாய் எழுதி விடுகிறார்கள். அவர் பல, சில என்னும் அஃறிணைப் பலவின்பால் பெயர்களின் முன் வல்லினம் இயல்பாகும் என்பதை அறியார் போலும்.'' (குயில், 15-4-1962)

பாரதிதாசன் தம் இறுதிக்காலத்தில் 'பாட்டுக்கு இலக்கணம்' என்ற தொடர்கட்டுரைகள் ஒரு நூலாக வெளிவர வேண்டும் என்று விரும்பினார். ஆயினும் பாரதிதாசன் மறைந்து பல்லாண்டுகள் சென்றும் அவர் விருப்பம் நிறைவேறாமலேயே இருந்தது.

பாரதிதாசன் நினைவுகளும், அவர் ஏற்றுக் கொண்ட கொள்கைகளும் என்றும் அழியாதவை. யாராலும் அழிக்க இயலாதவை. எனவே, அவர் அன்று அச்சு வடிவம் பெற விரும்பிய நூல் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் பூம்புகார் பிரசுரத்தால் பதிப்பிக்கப்படுகின்றது.

**—டாக்டர் ச. சு. இளங்கோ**

பாவலர் வாழ்க்கை பயன்மரம், ஊருணி.
யாவரும் கொள்வீர் இனிது.

## பாவேந்தர் வாழ்க்கைக் குறிப்புகள்

**1891** — ஏப்ரல் 29, புதன் இரவு 10-15 மணிக்குப் புதுவையில் சுப்புரத்தினம் பிறந்தார். தந்தை கனகசபை, தாய் இலக்குமி. உடன் பிறந்தோர்: தமையன் சுப்பராயன், தமக்கை சிவகாமசுந்தரி, தங்கை இராசாம்பாள்.

**1895** — ஆசிரியர் திருப்புளிசாமி அய்யாவிடம் தொடக்கக் கல்வி. இளம் வயதிலேயே பாடல் புனையும் ஆற்றல் பெற்ருர். பாட்டிசைப்பதிலும் நடிப்பதிலும் ஊரில் நற்பெயர் பெற்ருர். பத்தாம் வயதிலேயே சுப்புரத்தினத்தைப் பெற்றதால் புகழ் பெற்றது புதுவை.

**1908** — புதுவை அருகில் உள்ள சாரம் முதுபெரும் புலவர் (மகா வித்துவான்) பு. அ. பெரியசாமியிடமும், பின்னர், பெரும்புலவர் பங்காரு பத்தரிடமும், தமிழ் இலக்கண-இலக்கியங்களையும், சித்தாந்த-வேதாந்த பாடங்களையும் கசடறக் கற்ருர். மாநிலத்திலேயே முதல் மாணவராகச் சிறப்புற்ருர். புலவர் சுப்புரத்தினத்தை, வேணு (வல்லூறு) நாயகர் வீட்டுத் திருமணத்தில் பாரதியார் காணும் பேறு பெற்ருர். பாரதியாரின் தேர்வுத் 'தராசி'ல் நின்ருர்; வென்ருர். நட்பு முற்றியது; பாரதியாரின் எளிய தமிழ், புலமை மிடுக்கேறிய சுப்புரத்தினத்தைப் பற்றியது.

**1909** — கல்வி அதிகாரி கையார் உதவியால், காரைக்கால் சார்ந்த நிரவியில் ஆசிரியப் பணி ஏற்றல்.

**1910** — வ.உ.சி.யின் நாட்டு விடுதலை ஆர்வத்தால் கனிந்திருந்த புலவர்—பாரதியார், வ.வே.சு., டாக்டர். வரதராசுலு, அரவிந்தர் போன்ருேர்க்குப் புகலிடம் அளித்தல், தம் பெற்ருேர்க்குத் தெரியாமல்

மேல் துண்டில், வடித்த சோறு கொடுத்தல். ஓரோர் அமையங்களில் செலவுக்குப் பணம் தருதல். காவல் நாய்களின் வேட்டையிலிருந்து தப்ப உதவல். பாரதியாரின் 'இந்தியா' ஏட்டை மறைமுகமாகப் பதிப்பித்துத் தருதல். ஆஷ் கலெக்டரைச் சுட்ட துப்பாக்கி பாவேந்தர் அனுப்பியதே.

**1916** — தந்தையார் (23—1—16) இயற்கை எய்தல்.

**1918** — பாரதியாருடன் நெருங்கிப் பழகிய பழக்கத்தால், சாதி, மதம் கருதாத தெளிந்த உறுதியான கருத்துகளால் ஈர்ப்புற்றுப் புலமைச் செருக்கும் மிடுக்கும் மிகுந்த நடையில் எழுதும் தேசிய, தெய்வப் பாடல்களைப் பழகு தமிழில் எழுதுதல். புதுவை, தமிழக ஏடுகளில், புதுவை. கே. எஸ். ஆர்; K. S. R., கண்டெழுதுவோன், கிறுக்கன், கிண்டல்காரன், கே. எஸ். பாரதிதாஸன் என்ற பெயர்களில், பாடல், கட்டுரை, கதை, மடல்கள் எழுதுதல், 10 ஆண்டுக் காலம் பாரதியார்க்கு உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும் தோழனாய் இருந்தார்.

**1919** — திருபுவனையில் ஆசிரியராக இருக்கையில் பிரெஞ்சு அரசுக்கு எதிராகச் செயல்பட்டார் என்று குற்றம் சாட்டி $1\frac{1}{4}$ ஆண்டு சிறை பிடித்த அரசு, தவறுணர்ந்து விடுதலை செய்தது. வேலை நீக்க, வழக்கில் புலவர் வென்று மீண்டும் பணியில் சேர்தல்.

**1920** — இந்திய விடுதலை அறப்போராட்டத்தில் பங்கேற்றல். புவனகிரி பெருமாத்தூர் பரதேசியார் மகள் பழனி அம்மையை மணத்தல். தம் தோளில் கதர்த் துணியைச் சுமந்து தெருத் தெருவாய் விற்றல்.

**1921** — செப்டம்பர் 19—தலைமகள் சரசுவதி பிறப்பு. (12—11—21) பாரதியார் மறைவு.

**1922** — K. S. பாரதிதாஸன் என்ற புனைபெயரைத் தொடர்ந்து பயன்படுத்தி, தேச சேவகன்; 'துய்ப்ளேச்சு', 'புதுவை கலைமகள்' தேசோபகாரி 'தேச பக்தன்' 'ஆனந்தபோதினி' 'சுதேசமித்திரன்'

இதழ்களில் தொடர்ந்து பாடல், கட்டுரை, கதைகள் எழுதுதல்.

*1924* — சோவியத்நாட்டு மாவீரர் இலெனின் இழப்பிற்குப் பாடல்.

*1926* — **ஸ்ரீ மயிலம் சுப்ரமணியர் துதியமுது**–நூலால் சிந்துக்குத் தந்தையாதல்.

*1928* — நவம்பர்-3, கோபதி (மன்னர்மன்னன்) பிறப்பு. தன்மான (சுயமரியாதை) இயக்கத்தில் பெரியார் ஈ. வே. ராவுடன் இணைதல். தாமும் தம் குடும்பமும் பகுத்தறிவுக் கொள்கையை மேற்கொள்ளல். குடும்பத் திருமணங்களில் தாலியைத் தவிர்த்தல்.

*1929* — 'குடியரசு', 'பகுத்தறிவு' ஏடுகளில் பாடல், கட்டுரை, கதை எழுதுதல்; குடும்பக் கட்டுப்பாடு பற்றி இந்தியாவிலே முதன்முதல் பாட்டெழுதிய முதல் பாவலர் என்ற சிறப்புப் பெறல்.

*1930* — பாரதி, புதுவை வருகைக்கு முன்னும் பின்னும் பாடிய, **சிறுவர் சிறுமியர் தேசிய கீதம்; தொண்டர் நடைப்பாட்டு; கதர் இராட்டினப்பாட்டு** நூல் வடிவில் வெளியிடப்பட்டன. தொடர்ந்து **சஞ்சீவி பர்வதத்தின் சாரல்; தாழ்த்தப்பட்டார் சமத்துவப் பாட்டு** நூல்களை ம. நோயேல் வெளியிடல். டிசம்பர் 10-ல் 'புதுவை முரசு' கிழமை ஏட்டின் ஆசிரியர் பொறுப்பேற்றல்.

*1931* — 'புதுவை முரசு' (5–1–31) ஏட்டில் செவ்வாய் உலக யாத்திரை-கட்டுரை வரைதல். **சுயமரியாதைச் சுடர்** என்ற 10 பாடல்களைக் கொண்ட நூலைக்'கிண்டற்காரன்' என்றபெயரில் வெளியிடல். (குத்தூசி குருசாமிக்கு இந்நூல் படைப்பு) 18–8–31 இரண்டாம் மகள் வசந்தா (வேனில்) பிறப்பு. பள்ளி ஆண்டு விழாவில் 'சிந்தாமணி' என்ற முத்தமிழ் நாடகம் எழுதி இயக்குதல்.

*1932* — **வாரிவயலார் வரலாறு அல்லது கெடுவான் கேடு நினைப்பான்**—புதினம் வெளியிடல். வெளியார்

நாடகங்கட்கும், தன்மான, பொதுவுடைமைக் கூட்டங்களுக்கும் பாட்டெழுதித் தருதல்.

1933 — ம. சிங்காரவேலர் தலைமையில் சென்னை ஒயிட்சு நினைவுக் கட்டடத்தில் (31-1-33) நடந்த நாத்திகர் மாநாட்டில் கலந்துகொண்டு வருகைப் பதிவேட்டில் 'நான் ஒரு நிரந்தரமான நாத்திகன்' என்று எழுதிக் கையெழுத்திடல்.

1933 — மூன்றும் மகள் ரமணி பிறப்பு

1934 — மாமல்லபுரத்திற்கு முழுநிலா இரவில் தோழர் ப. ஜீவானந்தம், குருசாமி, குஞ்சிதம், நயினு சுப்பிரமணியம், மயிலை. சீனி. வேங்கடசாமி, மாயூரம் நடராசன், சாமி சிதம்பரனுர், எஸ். வி. இலிங்கம், நாரண துரைக்கண்ணனுடன் படகில் செல்லல்; 'மாவலிபுரச் செலவு,—பாடல் பிறந்தது. 9-9-34-ல் இரணியன் அல்லது இணையற்ற வீரன் நாடகம் பெரியார் தலைமையில் நடைபெறல். (குருசாமி இரணியன்-திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம்—பிரகலாதன்)

1935 — இந்தியாவின் முதல் பாட்டேடான—'ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்' தொடக்கம். இதற்கு உறுதுணையாக இருந்தவர். எஸ். ஆர். சுப்பிரமணியம் (சர்வோதயத் தலைவர்.)

1936 — பெங்களூரில் பதினுன்கு நாள் தங்கி (1-4-36) 'தேசிங்குராஜன்' வரலாற்றை அட்கின்சு குழுமத்தார்க்கு 'இஸ் மாஸ்டர் வாய்ஸ்' இசைத்தட்டுகளில் பதித்தல்.

1937 — **புரட்சிக்கவி**—குறுங்காவியம் வெளியிடல். 'பாலாமணி அல்லது பக்காத் திருடன்' திரைப்படத்திற்குக் கதை, உரையாடல், பாடல் எழுதுதல். இதில் நடித்தவர்கள்: தி. க. சண்முகம் உடன் பிறந்தோர் அனைவரும்.

1938 — **பாரதிதாசன் கவிதைகள்** முதல் தொகுதியைக் குத்தூசி குருசாமி, குஞ்சிதம் குருசாமி **வெளியிட்**

டனர். பொருளுதவி செய்தவர் கடலூர் தி. கி. நாராயணசாமி (நாயுடு). தமிழிலக்கியத்திலேயே பெரும் புரட்சியை உண்டாக்கியதால், பெரியார், ''தன்மான இயக்கத்தின் ஒப்பற்ற பாவலர்'' என்று பாராட்டினார். டாக்டர். மாசிலாமணியார் நடத்திய 'தமிழரசு' இதழில் தொடர்ந்து எழுதுதல். **தமிழுக்கு அமுதென்று பேர்** என்ற பாடலை அச்சுக் கோத்தவர் பின்னாளில் சிறப்புற்ற எழுத்தாளர் 'விந்தன்'.

**1939** — 'கவி காளமேகம்'—திரைப்படத்திற்குக் கதை—உரையாடல் பாடல் எழுதுதல். **இரணியன் அல்லது இணையற்ற வீரன்** நூல் வடிவில் வருதல்.

**1941** — **எதிர்பாராத முத்தம்**—காவியம். காஞ்சி பொன்னப் பாவால் வானம்பாடி நூற்பதிப்புக் கழகத்தில் வெளியிடல். இதற்கு மேலட்டை ஓவியம் இராய் சௌத்திரி.

**1942** — **குடும்பவிளக்கு I** வெளியிடல். இந்தியப்போராட்ட எழுச்சியை மறைமுகமாக ஊக்குவித்தல். இரண்டாம் உலகப்போரை—இட்லரை எதிர்த்தல். பல ஏடுகட்கும் எழுதுதல்.

**1943** — **பாண்டியன் பரிசு**—காவியம் வெளியிடல்.

**1944** — பெரியார் முன்னிலையில் தலைமகள் சரசுவதி திருமணம். மணமகன் புலவர் கண்ணப்பர். 'இன்ப இரவு' (புரட்சிக்கவி) முத்தமிழ் நிகழ்ச்சி அரங்கேற்றம். **இருண்ட வீடு, காதல் நினைவுகள், நல்ல தீர்ப்பு,** (நாடகம்) **அழகின் சிரிப்பு** ஆகிய நூல்கள் ஒன்றன்பின் ஒன்றாய் வெளியிடல். 'சதிசுலோசனா' என்ற திரைப்படத்திற்குக் கதை, உரையாடல், பாட்டு எழுதுதல். **குடும்ப விளக்கு II** வெளியிடல், செட்டி நாடு முழுதும் இலக்கியச் சொற்பொழிவு நடத்திப் பகுத்தறிவு இயக்கத்தைக் காலூன்றச் செய்தல். கலைவாணர் என். எஸ். கே. வுக்காக 'எதிர்பாராத முத்தம்'—நாடகமாகத் தீட்டித் தருதல். 'கற்கண்டு' 'பொறுமை கடலினும் பெரிது' இணைத்து எள்ளல் நூல் வெளியிடல்.

1945 — புதுவை, 95, பெருமாள் கோயில் தெரு வீட்டை வாங்குதல். **தமிழியக்கம்** *(ஒரே இரவில் எழுதியது)*, **'எது இசை'** *நூல்கள் வெளியிடல்.*

1946 — *'முல்லை' இதழ் தொடங்கப்பட்டது.* **அமைதி**— *ஊமை நாடகம் வெளியிடல். (29-7-46) பாவேந்தர் 'புரட்சிக்கவி'* என்று போற்றப்பட்டு *ரூ. 25000— கொண்ட பொற்கிழியை, நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் பொன்னாடை போர்த்தி, அறிஞர் அண்ணா திரட்டித் தந்தார். தமிழகப் பேரறிஞர்கள் அனைவரும் வாழ்த்திப் பேசினர். 8-11-46-ல் முப்பத்தேழாண்டு தமிழாசிரியர் பணிக்குப்பின் பள்ளியிலிருந்து ஓய்வு பெறுதல்.*

1947 — புதுக்கோட்டையிலிருந்து **குயில்** 1, 2 மாத வெளியீடு. **'சௌமியன்'** *நாடக நூல்*, **பாரதிதாசன் ஆத்திசூடி** *வெளியிடுதல், சென்னையில் 'குயில்' இதழ். 'ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி' திரைப்படக் கதை, உரையாடல், பாட்டு தீட்டல்.* **இசையமுது** *வெளியிடல், புதுவையிலிருந்து 'குயில்' ஆசிரியர்—வெளியிடுபவர்.* **'கவிஞர் பேசுகிறார்'** *சொற்பொழிவு நூல்.*

1948 — **காதலா கடமையா?** *காவியம்;* **முல்லைக்காடு, இந்தி எதிர்ப்புப் பாடல்கள், படித்த பெண்கள்** *(உரை நாடகம்)* **கடல்மேற் குமிழிகள்** *காவியம்;* **குடும்ப விளக்கு III; திராவிடர் திருப்பாடல், அகத்தியன் விட்ட கரடி** *நூல் வெளியிடல். 'குயில்' மாத ஏட்டிற்குத் தடை; நாளேடாக்கல்.* **கருஞ் சிறுத்தை** *உருவாதல்.*

1949 — **பாரதிதாசன் கவிதைகள்** *2ஆம் தொகுதி;* **சேர தாண்டவம்** *(முத்தமிழ் நாடகம்);* **தமிழச்சியின் கத்தி** *காவியம்,* **ஏற்றப் பாட்டு** *வெளியிடல்.*

1950 — **குடும்ப விளக்கு IV; குடும்ப விளக்கு V** *வெளியிடல்.*

1951 — *செப்டம்பர் 15-ல் வேனில் (வசந்தா தண்டபாணி) திருமணம் அ. பொன்னம்பலனார் தலைமையில் நடந்தது.* **அமிழ்து எது; கழைக் கூத்தியின் காதல்**—*வெளியிடல்.*

***அறுபதாண்டு மணிவிழா - திருச்சியில் நிகழ்வுறல்.***

***1952*** — 'வளையாபதி' திரைப்படம் கதை, உரையாடல் பாட்டு. **இசையமுது** இரண்டாம் தொகுதி வெளியிடல்.

***1954*** — **பொங்கல் வாழ்த்துக் குவியல்; கவிஞர் பேசுகிறார்** சொற்பொழிவு நூல் வெளிவரல், குளித்தலையில் ஆட்சி மொழிக் குழுவிற்குத் தலைமை ஏற்றல்.

***1954*** — ***7-2-1954*** மூன்றும் மகள் ரமணி-சிவசுப்ரமணியம் திருமணம் இராசாக்கண்ணனார் தலைமையில் நடந்தது.

***1955*** — புதுவைச் சட்டமன்றத் தேர்தலில் வெற்றியுற்று அவைத் தலைமை ஏற்றல். சூன் 26-ல் மன்னர் மன்னன்—மைசூர் வீ. சாவித்திரி திருமணம். கோவை. அ. அய்யாமுத்து தலைமை. **பாரதிதாசன் கதைகள், பாரதிதாசன் கவிதைகள்**—மூன்றும் தொகுதி வெளியிடல்.

***1956*** — **தேனருவி**—இசைப்பாடல்கள் வெளியிடல்.

***1958*** — **தாயின்மேல் ஆணை; இளைஞர் இலக்கியம்** வெளியிடல். தமிழகப் புலவர் குழுவின் சிறப்புறுப்பினராதல். 'குயில்' கிழமை ஏடாக வெளிவருதல்.

***1959*** — **பாரதிதாசன் நாடகங்கள்; குறிஞ்சித் திட்டு** காவியம் வெளியிடல்; **பிசிராந்தையார்** முத்தமிழ் நாடகம் தொடர்தல்; 1-11-59 முதல் திருக்குறளுக்கு **வள்ளுவர் உள்ளம்** என்ற உரை விளக்கம் எழுதுதல்.

***1961*** — சென்னைக்குக் குடி பெயர்தல்; பாண்டியன் பரிசு—திரைப்படம் எடுக்கத் திட்டமிடல். செக் நாட்டு அறிஞர் பேரா. கமில்சுவலபில் செக் மொழியில் பெயர்த்த பாவேந்தரின் பாடல்களைக் கொண்ட நூலைப் பெறுதல். ஜஸ்டிஸ். எஸ். மகராசன் நட்புறவு.

***1962*** — சென்னையில் மீண்டும் 'குயில்' கிழமை ஏடு. (15-4-62) அனைத்துலகக் கவிஞர் மன்றத் தோற்றம், **கண்ணகி புரட்சிக் காப்பியம், மணிமேகலை வெண்பா**. வெளியிடல். தமிழ் எழுத்தாளர் சங்கம் சார்பில் இராசாசி பொன்னாடை அணிவித்துக் கேடயம் வழங்கல்.

**1963** — தோழர் ப. ஜீவானந்தம் மறைவு குறித்துப் 'புகழ் உடம்பிற்குப் புகழ்மாலை' பாடல் எழுதுதல். சீனப் படையெடுப்பை எதிர்த்து அனைத்திந்திய மக்களை வீறு கொண்டெழப் பாடல்கள் எழுதுதல், **பன்மணித்திரள்** நூல் வெளியீடு. 72-ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா. வழக்கறிஞர் வி. பி. இராமன் தலைமையில் நடைபெற்றது. 'பாரதியார் வரலாறு' திரைப்படம் எடுக்கத் திட்டமிட்டு எழுதி முடித்தல். இராசிபுரத்தில் புலவர் அரங்கசாமி கூட்டிய கவிஞர்கள் மாநாட்டில் தலைமை ஏற்றல்.

**1964** — பாரதியார் வரலாற்றுத் திரைப்படத்திற்குத் தீவிர முயற்சி. சென்னை பொது மருத்துவ மனையில் ஏப்ரல் 21-ல் இயற்கை எய்தல். மறுநாள் புதுவை கடற்கரையில் உடல் அடக்கம். வாழ்ந்த காலம் 72 ஆண்டு 11 மாதம் 28 நாள்.

**1965** — ஏப்ரல் 21. புதுவை கடற்கரை சார்ந்த பாப்பம்மா கோயில் இடுகாட்டில் பாரதிதாசன் நினைவு மண்டபம், புதுவை நகராட்சியினரால் எழுப்பப் பட்டது.

**1968** — உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டின்போது சென்னை கடற்கரையில் பாவேந்தர் உருவம் நாட்டப் பெறல்.

**1970** — மார்ச். கவிஞரின் 'பிசிராந்தையார்' நாடக நூலுக்கு சாகித்ய அகாதமி ரூ. 5000 பரிசு வழங்கியது.

**1970** — சனவரி—ரமணி மறைவு.

**1971** — ஏப்ரல் 29 பாவேந்தரின் பிறந்தநாள் விழா புதுவை அரசு விழாவாகக் கொண்டாடப் பெற்றது. ஒவ்வோராண்டும் அரசு விழா நிகழ்கிறது. பாவேந்தர் வாழ்ந்த பெருமாள் கோயில்தெரு 95ஆம் எண் இல்லம் அரசுடைமையாயிற்று. அங்கே புரட்சிக் கவிஞர் நினைவு நூலகம்—காட்சிக் கூடம் நடந்து வருகிறது.

**1972** — ஏப்ரல் 29, பாவேந்தரின் முழு உருவச்சிலை புதுவை அரசினரால் திறந்து வைக்கப்பெற்றது.

**1979** — 'கடல்மேற் குமிழிகள்' காப்பியத்தின் பிரஞ்சு மொழியாக்கம் வெளியிடப்பெறல்.

— **மன்னர் மன்னன்**

# பாட்டுக்கு இலக்கணம்

## வல்லெழுத்து மிகாத இடங்கள்

வல்லெழுத்து என்றது **க், ச், ட், த், ப், ற்** என்ற வல்லொற்றுக்கள்.

மிகாத இடங்கள் என்றால் என்ன? அகர வீற்றுப் பெயரெச்சத்தின் முன் வல்லெழுத்து வந்தால் இடையில் வல்லொற்று மிகாது. இதுதான் வல்லெழுத்து மிகாத இடம்.

வல்லெழுத்து மிகாத இடங்களை நான் விரித்துரைக்கு முன்—அறிவிக்க வேண்டியவை சில உண்டு. அவைகளைப் 'படிப்பவர்' மறவாமல் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

'வரும்படி சொன்னான்' என்பதில் இரண்டு சொற்கள் இருக்கின்றன. அவற்றில்—வரும்படி என்ற சொல் நிலைமொழி. சொன்னான்—வருமொழி.

இனிப் பெயரெச்சம் என்றால் என்ன? எது? என்பவைகளை விளக்குகின்றேன்.

**பெயரெச்சம் :**

பெயர் குறைந்து வரும் எச்சச் சொல், அதாவது, குறைந்த சொல் பெயரெச்சம். எனவே, பெயரைக் கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சம் என்க.

**எடுத்துக் காட்டு:**

வருகின்ற பாம்பு. இவைகளில் வருகின்ற என்பது பெயரெச்சம். அது பாம்பு என்ற பெயரெச்சத்தைக் கொண்டு முடிந்தது காண்க.

வந்த குதிரை என்பதில் வந்த என்பது இறந்த காலத் தெரிநிலைப் பெயரெச்சம்.

வருகின்ற குதிரை என்பதில் வருகின்ற என்பது நிகழ் காலத் தெரிநிலைப் பெயரெச்சம்.

சென்ற காலம் என்பதில் சென்ற என்பது இறந்தகாலத் தெரிநிலைப் பெயரெச்சம்.

செல்கின்ற காலம் என்பதில் செல்கின்ற என்பது நிகழ் காலத் தெரிநிலைப் பெயரெச்சம்.

இவைபோல வருவன எல்லாம் பெயரெச்சம் என்க. தெரிநிலை என்றால் என்ன?

*வல்லினம் வந்தன இயல்பாயின :*

சிலர், வருகின்றனக் குதிரைகள், பெரியனக் குதிரைகள் எனப் பிழையாய் எழுதி விடுகின்றார்கள். அவர்கள் அகர வீற்று அஃறிணைப் பலவின்பால் வினைமுற்றுக்களின் முன் வரும் வல்லினம் இயல்பாகும் என்பதை அறியார் போலும்.

பல, சில என்பவை பலவின்பால் அஃறிணைப் பெயர்ச் சொற்கள்.

இந்த இரண்டு சொற்களின் முன்பும் வல்லெழுத்து வந்தால் மிகாது இயல்பே யாகும்.

**எடுத்துக் காட்டு:**

பல குதிரைகள், பல பேர்கள், பல தேர்கள், சில குதிரைகள், சில பேர்கள், சில தேர்கள்.

சிலர், பலப்பேர், சிலக் குதிரைகள் என்று பிழையாய் எழுதிவிடுகிறார்கள். அவர் பல, சில என்னும் அஃறிணைப் பலவின்பால் பெயர்களின் முன் வல்லினம் இயல்பாகும் என்பதை அறியார் போலும்.

இதில் இன்னொன்று நினைவிற் கொள்ள வேண்டும்.

பல என்பதன் முன் பல என்பதே வந்தால் **பலபல** என்றும் ஆகும். **பலப்பல** என்றும் ஆகும். **பற்பல** என்றும் ஆகும்.

அப்படியே **சிலமுன் சில** வரின் **சிலசில, சிலச்சில, சிற்சில** என்றெல்லாம் ஆகும்.

அகரத்தை ஈறாக உடைய கண்ட முதலிய பெயரெச்சங் களின் முன்போ, **க, பெ, பி,** ஆகிய வல்லெழுத்து வந்தால் மிகவில்லை இயல்பாகவே இருந்தது காண்க.

**பெரிய+குதிரை=பெரிய குதிரை**

**சிறிய+பன்றி=சிறிய பன்றி**

**வலிய+கொக்கன்=வலிய கொக்கன்**

**மெலிய+கயிறு=மெலிய கயிறு**

**உள்ள+பணம்=உள்ள பணம்**

அகர ஈற்றுக் குறிப்புப் பெயரெச்சங்களின் முன் வல்லினம் வந்தால் மிகாது என்பது தெரிகின்றது.

சிலர், வந்தக் குதிரை என்றும், போனப் பிள்ளை என்றும், என்றக் காலம் என்றும், பெரியப் பையன், சிறியப் பாம்பு என்றும் எழுதி வருகிறார்கள். அவர்கள் பெயரெச்சத்தின் முன் வலிவரின் மிகாது என்பதை அறியார் போலும்.

தெரிநிலை வினைமுற்று என்றும், இருவகை வினைமுற்றுக் களின் முன்னும் வரும் வல்லினம் மிகாது இயல்பாகும்.

**வந்தன குதிரைகள்**

**வருகின்றன பறவைகள்**

**எரிந்தன கொள்ளிகள்**

**எரிகின்றன கொள்ளிகள்**

இவைகளில் முதலில் உள்ளவை இறந்த கால அஃறிணை வினைமுற்றுக்கள். அவற்றின் முன் கு, ப, கொ, க ஆகிய வல்லெழுத்து வந்தன. இயல்பாயின. மிகவில்லை.

இனிக் குறிப்பு வினைமுற்றுப் பற்றிப் பார்ப்போம்.

**பெரியன குதிரைகள்**

**சிறியன குதிரைகள்**

**வலியன கழுகுகள்**

இவற்றில் பெரியன, சிறியன; வலியன குறிப்பு வினை முற்றுக்கள், அவற்றின் முன கு, கு, க, தெரிகின்ற நிலை. இறந்தகாலத் தெரிநிலை என்றால் இறந்த காலத்தைத் தெரியக் காட்டுகின்ற என்பதைப் பொருளாகக் கொள்க.

**பெயரெச்சம் பல வருமாறு :**

**நடந்த, நடக்கின்ற, வந்த, வருகின்ற, மடிந்த, மடிகின்ற** முதலியவை.

இங்குக் காட்டிய பெயரெச்சங்கள் அகரத்தைக் கடைசியில் உடைய பெயரெச்சங்கள். மேலும் காலத்தைத் தெரிய காட்டும் தெரிநிலைப் பெயரெச்சங்கள்.

இனிக் காலத்தைக் குறிப்பாகக் காட்டுகின்ற குறிப்புப் பெயரெச்சங்களும் உண்டு.

**பெரிய பாம்பு** என்பதில் **பெரிய** என்பது குறிப்புப் பெயரெச்சம். **சிறிய, அரிய** முதலியனவும் குறிப்புப் 'பெயரெச்சங்களே.

பயிற்சி:-

**கண்ட—இறந்த காலத் தெரிநிலைப் பெயரெச்சம்**

**காணுகின்ற—நிகழ்காலத் ,, ,,**

**சிரித்த—இறந்தகாலத் ,, ,,**

**பெரிய—குறிப்புப் பெயரெச்சம்**

**சிறிய ,, ,,**

**வலிய ,, ,,**

**மெலிய ,, ,,**

**உள்ள ,, ,,**

ஆகிய தெரிநிலைப் பெயரெச்சத்திற்கு முன்னும், குறிப்புப் பெயரெச்சத்திற்கு முன்னும் வல்லெழுத்து வந்தால் மிகாது. இயல்பாகும்.

**கண்ட + போது = கண்டபோது**

**காண்கின்ற + கண் = காண்கின்ற கண்**

**சிரித்த + பெண் = சிரித்த பெண்**

**சிரிக்கின்ற + பிள்ளை = சிரிக்கின்ற பிள்ளை**

குயில்—சென்னை 15—4—62

* * *

## தமிழைச் சரியாய் எழுத வல்லெழுத்து மிகாத இடங்கள்

**அம்ம** ஓர் இடைச்சொல். இச்சொல் செய்யுளில் சொற்றொடருக்கு முதலில் வரும்.

**அம்ம தோழி.** கேட்பாய் தோழி என்று பொருள். இந்த **அம்ம** என்பதன் முன் வல்லெழுத்து மிகாது.

**எடுத்துக் காட்டு :**

**அம்ம தோழி** மிகவில்லை. அல்லவா? என்ப உண்ப வருப என்றால், என்று சொல்லுவார்கள், உண்ணுவார்கள், வருவார்கள் என்று பொருள். உயர்திணைப் பலர்பால் **வினை** முற்றுக்கள் இவை. இவற்றின் முன் வரும் வல்லினம் மிகாது. இயல்பே யாகும்.

**என்ப பெரியோர்.** உண்ப கண்ணனார், **வருப தந்தையார்.** இயல்பே ஆகின காண்க.

**அன்ப, நண்ப** என்றால் **அன்பனே, நண்பனே** என்று பொருள். அருகில் இருப்பவனைக் கூப்பிடுவது. அண்மை **விளி** என்பர். இந்த அண்மை விளியாகிய அன்ப நண்ப என்ப வற்றின் முன்வரும் வல்லினம் மிகாது. இயல்பே யாகும்

**அன்ப+செல்=அன்ப செல்; நண்ப+தின்=நண்பதின்** மிகாமல் இயல்பாயின காண்க.

**செய்யிய போனான்** என்ற சொற்றொடரை நோக்குக. இதன் **செய்யப் போனான்** போனான் என்பதுதான். **செய்ய** என்பதற்குப் பதிலாக **செய்யிய** என்று பாட்டில் வரும். பேச்சு வழக்கில் வராது.

**செய்யிய** என்பது போலவே உண்ணிய காணிய என் றெல்லாமும் வரும். **உண்ணிய உண்ண, காணிய காண.**

**செய்யிய, உண்ணிய, காணிய** என்பனபோல வரும் வினையெச்சங்களின் முன் வல்லெழுத்து வந்தால் இயல் பாகும்; மிகாது.

**செய்யிய+சென்றான்=செய்யிய சென்றான்.**

**உண்ணிய+போனான்=உண்ணிய போனான்.**

**காணிய+சென்றான்=காணிய சென்றான்.**

இயல்பாயின காண்க.

**வாழ்க, வெல்க, செய்க, வாழிய** என்பவை வியங்கோள் வினைமுற்றுக்கள். இவற்றின் முன்வரும் வல்லினம் மிகாது. இயல்பே யாகும்.

**வாழ்க பெரியார், வெல்க கந்தனார், செய்க பொன்னனார், வாழிய பூதனார்** இயல்பாயின காண்க.

**வருக** என்பதும் வியங்கோள் வினைமுற்றுத்தான். **வருக, கற்றூர்** என்று இயல்பாயிற்றுக் காண்க.

இதுவரைக்கும் **அ** என்ற எழுத்தைக் கடைசியிலுள்ள சொற்களின் முன் வல்லெழுத்து வந்தால் இயல்பாகும் என்பது பற்றிக் கூறினேன். அவற்றில் சில கேள்விகள் கேட்கின்றேன்.

**பல, சில** என்பவை என்ன சொற்கள்? அவற்றின் முன் வரும் வல்லினம் மிகுமா?

விடை: **பலசில** அஃறிணைப் பலவின்பால் பன்மைப் பெயர்கள். இவற்றின் முன்வரும் வல்லெழுத்து மிகாது.

**பல போயின, சில சென்றன, சென்றன குதிரைகள்** என்ற தொடரில் **சென்றன** என்பது என்ன சொல்? வலி மிகுமா?

**சென்றன** அஃறிணைப் பலவின் பாற்படர்க்கை வினை முற்று. இதன் முன் வல்லெழுத்து மிகாது. **சென்றன குதிரைகள்** அதுபோல இன்னும் சில சொற்கள் சொல்லிக் காட்டு.

**விடை :** மிகாது. **அம்ம தோழி** என இயல்பாயிற்றுக் காண்க.

*அகர ஈற்றுப் பெயரெச்சங்கள் சில கூறுக.*

**விடை : வந்த குதிரை** என்ற தொடரில் **தந்த** என்பதும், **நடந்த கழுதை** என்பதில் **நடந்த** என்பதும் பிறவும் பெயரெச்சங்கள்.

*இவற்றின் முன் வலி மிகுமா?*

**விடை :** *மிகாது; இயல்பாகும்.*

**வந்த + குதிரை = வந்த குதிரை**

*வாழ்க, வாழிய, வருக என்ற வியங்கோள் வினைமுற்றுக்களின் முன் வரும் வலி இயல்பாகுமா?*

**விடை:** *ஆம்!*

**ஆ** *(ஆகார ஈறு)*

*இனி ஆ என்ற எழுத்தைக் கடைசியாகக் கொண்ட சொல்லின் முன் வல்லினம் வந்தால் மிகாத இடங்களைச் சொல்லுகின்றேன்.*

**ஓடா, வாரா, உண்ணு, தின்னு** என்றால் **ஓடமாட்டா, வரமாட்டா, உண்ணமாட்டா, தின்னமாட்டா** என்பது பொருள்.

**ஓடா + குதிரைகள் = ஓடா குதிரைகள்.**

**வாரா + காளைகள் = வாரா காளைகள்.**

**உண்ணு + குரங்குகள் = உண்ணு குரங்குகள்.**

**தின்னு + பன்றிகள் = தின்னு பன்றிகள்.**

*ஓடா, வாரா, உண்ணு, தின்னு என்பனவும் இவை போன்றவைகளும் அஃறிணைப் பலவின்பால் எதிர்கால வினைமுற்றுக்கள் என்று சொல்லப்படும்.*

**எதிர்மறை என்றால் என்ன?**

வரும் என்றால் உடன்பாடு
வாரா என்றால் எதிர்மறை
தின்னும் என்றால் உடன்பாடு
தின்னா என்றால் எதிர்மறை—என வேறுபாடு அறிக.

நண்பா **வேலா** என்பன செய்மை விளிகள். செய்மையி லிருப்பாரை அழைப்பது செய்மை விளி. **விளித்தல்**= அழைத்தல், **நண்பா, வேலா, குப்பா** என்பவற்றின் முன் வரும் வல்லெழுத்து மிகாது.

**நண்பா + போ = நண்பா போ**

**வேலா + தின் = வேலா தின்** பிறவும் இப்படியே

**அம்மா, அப்பா, பாப்பா**—இவையும் விளிகள்

**அம்மா + போவீர் = அம்மா போவீர்**

**அப்பா + தின்னுக = அப்பா தின்னுக**

**பாப்பா + செல் = பாப்பா செல்**

**அண்ணா + தருக = அண்ணா தருக**

*மிகவில்லை: இயல்பாயின் அல்லவா?*

**சேர சோழ பாண்டியா** என்பவையும் இப்படியே.

**சேரா + காக்க = சேரா காக்க,**

**சோழா + போர் புரிக = சோழா போர் புரிக**

**பாண்டியா + புகழ் பெறுக = பாண்டியா புகழ் பெறுக**

சேராக் காக்க, சோழாப் போர்புரிக என்பன பிழைகள்.

குயில்—சென்னை 1—5—62

* * *

அகர ஈற்றுச் சொல்லின் முன்னும், ஆகார ஈற்றுச் சொல்லின் முன்னும் வல்லெழுத்து வந்தால் மிகாத இடங்கள் காட்டப்பட்டன.

இனி இகர ஈற்றுச் சொல்லின் முன் வல்லெழுத்து மிகாத இடங்கள் காட்டப்படும்.

**புலி, எலி, சாணி, துணி, ஆணி, ஏரி** ஆகிய இவைகள் இகர ஈற்றுச் சொற்கள் கடைசியில் இகரம் இருப்பதால்,

இந்த இகர ஈற்றுச் சொற்களின் முன் வல்லெழுத்து வந்தால் மிகுமா மிகாதா என்பது விளக்கப்படும். **புலி போனது, எலி தின்றது, துணி கிழிந்தது. ஆணி பெரிது** என்பன எழுவாய்த் தொடர் என்று சொல்லப்படும்.

புலி போனது என்றால் புலியானது போனது என்று தானே பொருள். எலி தின்றது என்றால் எலியானது தின்றது என்றுதானே பொருள். ஆணி பெரிது என்றால் ஆணியானது பெரியது என்று பொருள்படவில்லையா? இப்படிப் பொருள்பட வருவதுதான் எழுவாய்த் தொடர் என்பது.

எழுவாய்த் தொடரா யிருந்தால் இகர ஈற்றின்முன் வல்லெழுத்து மிகாது.

**எலி + தின்றது = எலி தின்றது**

**சாணி + குறைந்தது = சாணி குறைந்தது**

**புலி + பாய்ந்தது = புலி பாய்ந்தது**

உம்மைத் தொகைநிலைத் தொடர் என ஒன்று இருக்கிறது.

புலி, கரடி என்பது உம்மைத் தொகை நிலைத்தொடர். புலியும் கரடியும் என்று பொருள்படும்போது நடுவில் உம் என்பது குறைந்து வந்தது அல்லவா?

**புலி + கரடி = புலி கரடி**

புலி இகர வீற்றுச் சொல். அதன்முன் **க** என்ற வல்லெழுத்து வந்தது. மிகவில்லை.

இதை எப்படிச் சொல்ல வேண்டுமென்றால் இகரத்தின் முன் உம்மைத் தொகையில் வல்லெழுத்து வந்தால் இயல்பாகும்.

அதுபோலவே,

ஏரிகுளம், இதற்கு ஏரியும் குளமும் என்பது பொருள் ஆதலால் இது உம்மைத் தொகையில் இகரத்தின்முன் வல்லெழுத்து வந்ததால் இயல்பாயிற்று.

**ஏரி + குளம் = ஏரிக்குளம்** இயல்பாயிற்று.

ஏரி**க்**குளம் என்பது பிழை.

**மந்தி + கடுவன் = மந்திகடுவன்.** மந்தியும் கடுவனும் என்று பொருள்.

இனி, இகர ஈற்றுச்சொல் உயர்திணையாய் இருந்தால் வரும் வல்லெழுத்து மிகாது. கூனி உயர்திணைச் சொல் இதன் முன் வல்லெழுத்து வந்தால்,

**கூனி + பேசினாள் = கூனி பேசினாள்** என்று இயல்பாகும். கூனி**ப்** பேசினாள் என்பது பிழை.

**அண்ணி + சென்ருள் = அண்ணி சென்ருள்.**

**செட்டி + போஞன் = செட்டி போஞன்.**

**குழலி + கண்டாள் = குழலி கண்டாள்.**

**முதலி + பேசிஞன் = முதலி பேசிஞன்.**

இனி எறிபந்து என்பதன் இடையில் ஒற்று மிகாது.

**எறி + பந்து = எறிபந்து**

அதுபோலவே,

**விரி + பசும்பொன் = விரிபசும்பொன்** என இயல்பே ஆகும். மிகாது. ஏன்?

**எறி** என்பதும், **விரி** என்பதும் வினைத்தொகை. எப்படி?

**எறி** என்பது **எறிந்த** என்று இறந்த காலத்தையும் காட்டவில்லை. **எரிகின்ற** என்று நிகழ்காலத்தையும் காட்ட வில்லை. **எறியும்** என்று எதிர்காலத்தையும் காட்டவில்லை. இப்படி வருகின்றவைகள் வினைத்தொகை என்பார்கள்.

**எறி, விரி, பிரி, திரி,** இவைகள் வினைத்தொகைகளே. **பிரி + பொருள் = பிரிகின்ற, பிரிந்த, பிரியும்** என மூன்று காலத்துக்கும் பொதுவாய் நிற்பதால், **திரி + புலி = திரிபுலி = திரிந்தபுலி, திரிகின்ற புலி, திரியும் புலி** என்று பொருள்படுதல் காண்க.

இனி,

**வரும்படி + கூறிஞன் = வரும்படி கூறிஞன்.**

மிகவில்லை. இயல்பாயிற்று.

வரும்படி என்ற தொடரை நோக்குக. இதை வினையை அடுத்தபடி என்பார்கள். ஏன்? வரும் என்பது வினைச்சொல். அதை அடுத்து வந்ததால் வினையை அடுத்தபடி என்பதாயிற்று. இதுபோலவே,

**போகும்படி + சொன்னான் = போகும்படி சொன்னான்.** இயல்பாயிற்று. போகும்படிச் சொன்னான் என்பது பிழை. **மறுபடி + சொன்னான் = மறுபடி சொன்னான்.** மறு என்பதை அடுத்து வந்தபடி முன்னும் வல்லெழுத்து இயல்பாயிற்று.

இனி,

**வா ஏடி, போ ஏடி** என்பன **வாடி போடி**, என வழங்கும். இந்த வாடி போடி என்பவற்றின் முன் வரும் மெல்லெழுத்து மிகாது இயல்பே யாகும்.

**வாடி + பொண்ணே = வாடி பொண்ணே**
**போடி + கண்ணே = போடி கண்ணே**

இனி,

**வாழி + பொன்னு = வாழி பொன்னு**
**வாழி + தோழி = வாழி தோழி**

என இயல்பாகும். ஏன்?

**வாழி** என்பது வியங்கோள் வினைமுற்று. அதற்குமுன் வரும் வல்லெழுத்து மிகாது. இயல்பாகும்.

இனி, **படிப்பாய், நடிப்பாய், அடிப்பாய், ஓடிப்பாய்** என்பன **படி, நடி, அடி, ஓடி** என்று நிற்கும். இவற்றின் முன் வல்லெழுத்து மிகாது.

**படி + கண்ணு = படிகண்ணு**
**நடி + பாப்பா = நடிபாப்பா**
**அடி + பார்ப்போம் = அடிபார்ப்போம்**
**ஓடி + சுள்ளியை = ஓடிசுள்ளியை**

இந்த **படி, நடி, அடி, ஓடி** அனைத்தும் ஆய் குறைந்து வந்த ஏவல் ஒருமை வினைமுற்றுக்கள் என்று சொல்லப்படும்.

பயிற்சிக் கேள்வி:

குன்றி சிதைந்தது எப்படி ஆகும்?

**குன்றி + சிதைந்தது = குன்றி சிதைந்தது** என இயல்பாகும். ஏன்?

குன்றி என்பது குண்டுமணிக்குப் பெயர். எனவே குன்றியானது சிதைந்தது என்று பொருள்படுகின்ற எழுவாய்த் தொடரால் இயல்பாயிற்று.

குயில்—சென்னை 15—5—62

*　　*　　*

ஈகாரத்தை இறுதியாக உடைய நிலைமொழியின் முன் வல்லெழுத்து வந்தால் மிகாமல் இயல்பாகும் இடங்கள் சில! அவை வருமாறு :

**நீ** என்பது ஈகாரத்தை இறுதியாக உடையதுதானே.

**ஏன் + ந் + ஈ = நீ ஆதலால்**

இந்த **நீ** என்பதன் முன் வருகின்ற வல்லெழுத்து மிகாது; இயல்பாகும்.

**நீ + போ = நீ போ　　நீ + காண் = நீ காண்**

**நீ + படி = நீ படி　　நீ + தொடு = நீ தொடு.**

**போ, ப, க, தொ** ஆகிய வல்லெழுத்து வந்தன; மிகவில்லையல்லவா?

**நீ போ** என்று எழுதாமல் நீப்போ என்று எழுதிவிட்டால் பிழையாகிவிடும்.

நீ முன்னிலை ஒருமைச் சொல்.

**தம்பீ** என்று அருகில் இருப்பவனை அழைக்கிறோம். ஆனால் தூரத்தில் இருப்பவனைத் **தம்பீ**—என்று அழைக்கின்றோம். இந்தத் **தம்பீ** என்ற சொல்லின் கடைசியில் ஈ இருக்கின்றது. அதன்முன் வரும் வல்லினம் மிகாது; இயல்பாகும்.

**தம்பீ + கொண்டுவா = தம்பீ கொண்டுவா**

**தம்பீ + பார்த்துவா = தம்பீ பார்த்துவா**

ஈகார இறுதி பற்றி இவ்வளவே தெரிந்து கொண்டால் போதும். இனி உகர இறுதிமுன் வலி இயல்பாகும் இடங்கள் கூறப்படும்.

குயில்—சென்னை 1—7—62

* * *

இனி உ என்ற எழுத்தை கடைசியாக உடைய சொல் லுக்குமுன் வல்லெழுத்து வந்தால் மிகாத இடங்கள் இன்னின்னவை என்பது சொல்லப்படும்.

உகரத்தை இறுதியாக உடைய சொற்கள் எல்லாம் இருவகைப்படும். ஒன்று குற்றியலுகரச் சொற்கள். இன்னொன்று முற்றியலுகரச் சொற்கள்.

இங்கே முதலில் குற்றியலுகரச் சொற்கள் கூறப்படும்.

குற்றியலுகரச் சொல்லின் கடைசியில் **கு, சு, டு, து, பு, று** என்ற ஆறு எழுத்துக்களில் ஏதாவது ஒன்று இருக்கும். இந்த **கு, சு, டு, து, பு, று** என்பவை என்ன எனில் உகரம் ஏறியுள்ள வல்லெழுத்துக்கள்.

இந்த ஆறு எழுத்துக்களில் ஒரெழுத்துக் கடைசியில் இல்லாவிட்டால் அச்சொல் குற்றியலுகரச் சொல் அல்ல.

**பாக்கு, குச்சு, பாட்டு, முத்து, சீப்பு, தாற்று** ஆகிய இந்த ஆறு சொற்களிலும் **கு,சு,டு,து,பு,று** வந்துள்ளது காண்க.

ஏழு என்பதில் கடைசியில் **கு,சு,டு,து,பு,று** எதுவுமில்லை. ஆதலால் இது குற்றியலுகரச் சொல் அல்ல.

இங்கு இன்னொரு சேதி சொல்ல வேண்டும். கடைசியில் **கு,சு,டு,து,பு,று** என்பதில் ஒன்றைப் பெற்று வந்தால் மட்டும் போதாது. ஒரு குற்றெழுத்தை யடுத்து வந்தாலும் அது குற்றியலுகரச் சொல் ஆகிவிடாது.

**புகு, விசு, மடு, அது, தபு, அறு** இவைகள் குற்றியலுகரச் சொற்கள் அல்ல.

ஏனெனில் அந்த **கு,சு,டு,து,பு,று** என்பவை ஒரு குற்றெழுத்தை அடுத்து வந்தன.

**நாடு** குற்றியலுகரச் சொல்லா? ஆம்; ஒரு நெட்டெழுத்தைத்தானே அடுத்து வந்தது?

குற்றியலுகரச் சொற்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியது இதுமட்டுமல்ல. இன்னும் உண்டு.

சுக்கு என்பது கு என்பதைக் கடைசியில் உடையதாக அமைந்திருப்பதால் இது குற்றியலுகரந்தான். இருந்தாலும் அது என்ன குற்றியலுகரம் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

கடைசியில் இருக்கும் **கு** எதை அடுத்து வந்துள்ளது? **க்** என்ற வல்லெழுத்து அடுத்து வந்துள்ளது. அதனால் அதை வன்றொடர்க் குற்றியலுகரச் சொல் என்று சொல்லவேண்டும். **சங்கு** குற்றியலுகரம்தான். கடைசியிலுள்ள **கு** எதை அடுத்து வந்துள்ளது. **ங்** என்ற மெல்லெழுத்தை. ஆகையால் அது மென்றொடர்க் குற்றியலுகரம்.

**போழ்து** இது இடைத்தொடர் குற்றியலுகரம் ஏன் கடைசியிலுள்ள **து** என்ற எழுத்து **ழ்** என்ற இடை எழுத்தைத் தொடர்ந்து வந்துள்ளது.

**போழ்து—பொழுது, சால்பு, சார்பு** என்பவைகளும் இடைத் தொடர் குற்றியலுகரங்களே.

**அழகு பெரிது, இரிசு** முதலியவை உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்கள் ஏன்? கடைசி எழுத்தானது உயிரை அடுத்து வந்துள்ளது. **ழ்+அ**=இரண்டும் சேர்ந்ததுதானே ழ? அதில் உயிர் இருந்ததல்லவா? அந்த உயிரெழுத்தை அடுத்துத்தானே சொல் முடிந்திருக்கிறது.

**அஃது**—இது ஆய்தத் தொடர். ஏன் ஆய்த எழுத்தை தொடர்ந்து வந்தது.

**ஆடு, காசு** முதலியவைகள் நெடிற்றொடர்க் குற்றியலுகரங்கள். ஏன்? நெட்டெழுத்தை அடுத்து வந்தது. நெடிற்றொடர்க் குற்றியலுகரச் சொற்கள் எப்போதும் முதலில் நெட்டெழுத்தைப் பெற்று இரண்டெழுத்துச் சொல்லாகவே இருக்கும்.

குயில்—சென்னை *1—7—62.*

*பூ—140—பா—3*

**சுக்கு, பட்டு, பாட்டு, முத்து, காப்பு, நேற்று** இவை கள் வன்றொடர்க் குற்றியலுகரங்கள். நாட்டு புகழ் என்பதன் பொருள் நாட்டுகின்ற புகழ், அல்லது நாட்டுப் புகழ், அல்லது நாட்டிய புகழ்.

ஆகையால் **நாட்டு** என்பது வினைத்தொகை. இந்த நாட்டு என்பதன் முன் வல்லெழுத்து வந்தால் மிகாது. இயல்பாகும்.

எடுத்துக்காட்டு :

**நாட்டு + புகழ் = நாட்டு புகழ்**

**கூப்பு கை** என்பதும் அதுவே. எனவே கூப்பு என்பதன் மூன் வரும் வல்லெழுத்து மிகாது. இயல்பாகும்.

**கூப்பு + கை = கூப்புகை.**

***சங்கு, பஞ்சு, மாண்பு, பந்து, வம்பு, ஒன்று*** இவைகள் மென்றொடர்க் குற்றியலுகரச் சொற்கள்!

இவற்றின் முன் வரும் வல்லெழுத்து மிகாது; இயல்பாகும்.

எடுத்துக்காட்டு :

**சங்கு + பிறந்தது = சங்கு பிறந்தது**
**பஞ்சு + காய்ந்தது = பஞ்சு காய்ந்தது**
**பண்பு + குறைந்தது = பண்பு குறைந்தது**
**பந்து + பறந்தது = பந்து பறந்தது**
**வம்பு + பண்ணினான் = வம்பு பண்ணினான்**
**ஒன்று + செய்தான் = ஒன்று செய்தான்**

**பெய்து, சார்பு, போழ்து, தெள்கு** இவற்றின் முன் வரும் வல்லினம் மிகாது; இயல்பாகும்.

*எடுத்துக்காட்டு:*

**பெய்து + தந்தான் = பெய்து தந்தான்**

**சார்பு + பற்றியது = சார்பு பற்றியது**

**சால்பு + கண்டோம் = சால்பு கண்டோம்**

**போழ்து + புலர்ந்தது = போழ்து புலர்ந்தது**

**தெள்கு + நடித்தது = தெள்கு நடித்தது**

'தெள்கு' என்பது தெள்ளுப்பூச்சி.

**நாகு, காசு, நாடு, காது, நூறு** இவை நெடிற்றொடர்க் குற்றியலுகரங்கள். இவற்றின் முன் வலி மிகாது; இயல்பாகும்.

*எடுத்துக்காட்டு:*

**நாகு + பெரிது = நாகு பெரிது**

**காசு + கொடு = காசு கொடு**

**பாடு + படு = பாடுபடு**

**நூறு + பணம் = நூறுபணம்**

'நாகு' என்றால் என்ன தெரியுமா? எருமை.

**எஃகு, கஃசு, அஃது**

கஃசு என்றால் 'கால் பலம்'

இவை ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம். இவற்றின் முன் வரும் வலி மிகாது இயல்பாகும்.

எடுத்துக்காட்டு:

எஃகு + கடிது = எஃகு கடிது
கஃசு + கொடு = கஃசு கொடு
அஃது + பெரிது = அஃது பெரிது

எஃகு என்றால் இரும்பு.

**அறுகு, இரிசு, குறடு, பெரிது, தருபு, தவறு,** இவை உயிர்த் தொடர்க் குற்றியலுகரங்கள்.

இவற்றின் முன் வலி மிகாது. இயல்பாகும்.

எடுத்துக்காட்டு:

அறுகு + பெருத்தது = அறுகு பெருத்தது
இரிசு + கழன்றது = இரிசு கழன்றது
குறடு + பெரிது = குறடு பெரிது
பெரிது + கொடுத்தான் = பெரிது கொடுத்தான்
தருபு + தந்தான் = தருபு தந்தான்
தவறு + செய்தான் = தவறு செய்தான்

**'அறுகு'** என்றால் அறுகம்புல்.

**'தருபு'** என்றால் தருவது.

குயில்—சென்னை 1–8–62

* * *

# தமிழைச் சரியாய் எழுத ஒற்று மிகாத இடங்கள்

**அ, ஆ, இ** ஆகியவற்றைக் கடைசியில் உடைய சொற்களின் முன் வரும் வல்லெழுத்து மிகாத இடங்கள் இன்னின்னவை என இதுவரைக்கும் எடுத்துக் காட்டப்பட்டன.

சென்ற குயிலில் இகர ஈற்றுச் சொற்களின் முன் வரும் வல்லெழுத்து மிகாமல் இயல்பாகும் இடங்கள் குறிக்கப்பட்டன.

அவை அனைத்தும் உங்கள் நினைவில் இடம் பெற்றவையா என்பதை அறிய இங்கே பயிற்சிக் கேள்விகளும் அவற்றிற்கான விடையும் தரப்படுகின்றன.

**கண்ட + போது = கண்டபோது**

**காண்கின்ற + கண் = காண்கின்ற கண்**

**சிரித்த + பெண் = சிரித்த பெண்**

தெரிநிலை பெயரெச்சத்தின் முன் வல்லெழுத்து இயல்பாயிற்று.

**பெரிய + குதிரை = பெரிய குதிரை**

**சிறிய + பன்றி = சிறிய பன்றி**

**வலிய + சொக்கன் = வலிய சொக்கன்**

**மெலிய + கயிறு = மெலிய கயிறு**

**உள்ள + பணம் = உள்ள பணம்**

குறிப்பு பெயரெச்சத்தின் முன் வலி இயல்பாயிற்று.

**வந்தன + குதிரைகள் = வந்தன குதிரைகள்**

**வருவன + பறவைகள் = வருவன பறவைகள்**

**எரிந்தன + கொள்ளிகள் = எரிந்தன கொள்ளிகள்**

**எரிகின்றன + கட்டைகள் = எரிகின்றன கட்டைகள்**

தெரிநிலை வினைமுற்றுக்களின் முன் வலி இயல்பாயிற்று.

**பெரியன + குதிரைகள் = பெரியன குதிரைகள்**

**வலியன + கழுகுகள் = வலியன கழுகுகள்**

குறிப்பு வினைமுற்றுக்களின் முன் வலி இயல்பாயிற்று.

**வருக+தமிழரே=வருக தமிழரே**

**செல்க+பொன்னு=செல்க பொன்னு**

**வாழிய+செந்தமிழ்=வாழிய செந்தமிழ்**

*வியங்கோள் வினைமுற்றின் முன் வந்த வலி இயல்பாயிற்று.*

**பல+குதிரைகள்=பல குதிரைகள்**

**சில+குதிரைகள்=சில குதிரைகள்**

*அஃறிணைப் பலவின்பால் பெயர் முன் வலி இயல்பாயிற்று.*

*குயில்—சென்னை* **16-6-62**

*   *   *

## பாட்டு எழுதுவோர்க்கு !

*பாட்டு எழுதுவோரிற் பலர், இன்னும் குற்றியலுகரத்தின் முன் வரும் உயிரைப் புணர்க்காமலே பாட்டின் அடி அளவை நிரப்பி வருகின்றார்கள்.*

*எடுத்துக்காட்டு:*

*''கண்டு அவனைக் கயல்விழிதான் காதலித்தாள்'' என்பது வெண்பாவின் ஓரடி.*

*கண்டு மென்றொடர்க் குற்றியலுகரச் சொல். இதன் முன் அவனை என்ற உயிர் முதற்சொல் வந்தால் கண்டவனை என்று புணர வேண்டும். அவ்வாறு கண்டவனை என்று புணர்ந்தாலோ தளை தட்டும்.*

*அதனால் கண்டு என்பதைக்* **கண்டே** *என்றும் ஆக்கிக் கொண்டால் அது குற்றியலுகரமும் ஆகாது; ஓசையும் கெடாது*

*வெண்பாவுக்கு மட்டும் அன்று; எந்தப் பாட்டிலும் இது கருதப்பட வேண்டும்.*

ஆநந்தக் களிப்பு

நந்தவ னத்திலோர் ஆண்டி—அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டுவந் தானொரு தோண்டி—அவன்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி
(நந்த)

இதே மெட்டில் ஒருவர் கீழ்வருமாறு பாட்டு எழுதுகின்றார்.

அது வருமாறு:

நாட்டை அடுத்தொரு காடு—அதில்
நாவலின் பொந்து அதிலொரு பாம்பு
போட்டது ஒன்று ஐயப்பன்—கீழ்ப்
பொத்தென்று வீழ்ந்தனன்; செத்து மடிந்தான்

என்பது.

இதன் முதலடியில் **காடு+அதில்** என்பன **காடதில்** என்று புணர வேண்டும். புணர்த்துப் பாடிப் பாருங்கள். ஓர் எழுத்துக் குறைவது தெரியும்.

இனி,

இரண்டாம் அடியில், **பொந்து+அதில்** என்பன பொந்தில் எனப் புணர வேண்டும். ஓர் எழுத்துக் குறைவதால் பாட்டின் ஓசையைக் கெடுக்கவில்லையா?

மூன்றும் அடியில், **போட்டது, ஒன்று** என்பன **போட்டதொன்று** எனப் புணர வேண்டும். இதுவும் அப்படியே. பிறகு,

**ஒன்று ஐயப்பன், ஒன்றையப்பன்** எனச் சேர்த்தல் வேண்டும். இப்படிச் சேரவே ஒன்றும் கெடவில்லையா?

இந்தத் தொல்லையெல்லாம் இல்லாது இருக்க இதைத் திருத்திப் பார்ப்போம்.

''நாவலின் **பொந்தாகும்** அதிலொரு பாம்பு'' என்ருல் பிழை நேராது.

நாட்டை அடுத்தொரு காடு—அதில்

என்பதை **நாட்டை அடுத்தொரு காடே** என்று ஆக்கிக் கொள்ளலாம்.

போட்டது ஒன்று ஐயப்பன் என்பதை **போட்டதுவே ஒன்றை யப்பன்** என்ருக்கிஞல் எப்பிழையும் நேரவில்லை.

இதிற் சிலருக்கு ஐயப்பாடு ஒன்று எழலாம். **'வண்டு இருந்து பாடு அரங்கு'** எனக் குற்றியலுகரத்தை உயிரோடு புணர்க்காமல் அச்சடித்துள்ளார்களே என்று அவர்கள் ஐயுறலாம்.

அது படிப்போருக்கு பொருள் விளங்குவதற்காகப் பிரித்து அச்சடித்திருக்கின்ருர்கள். அதைப் புணர்த்திப் பாடும்போது கெடுகிறதா? இல்லையே.

**வண்டிருந்து பாடரங்கு**

ஓட்டம் தடைப்படவில்லை; தளை தட்டவில்லை; இசை கெடவில்லை. இந்த வகையில் பிரித்து எழுதலாம்.

குரல்-2 குயில்-15.9.1959. இசை-10

* * *

# பாட்டு எழுதுவார்க்குச் சில குறிப்புக்கள் (க)

**தன், தான்** ஒருமைக்குரியவை.

**தம்,** தாம் பன்மைக்குரியவை.

ஆதலால்,

**அவன்** என்பதஞேடு **கன்** வரும் **(அவன்றன்)**

**அவர்** என்பதஞேடு **தாம்** வரும் **(அவர்தாம்)**

கீழே தரப்படும் அப்பர் செய்யுளை நோக்குக.

''ஒன்றி யிருந்து நினைமின்கள்
உந்தமக் கூனமில்லை''
''என்றுவந்தாய் என்னும் எம்பெருமான்றன்''

**உம் பன்மை, தன் பன்மையாதலால் உடன் வந்தது**

**உம் + தம் = உந்தம்**

பெருமான்றன் என்பதில் **பெருமான்** ஒருமை. **தம்** ஒருமை யாதலின் உடன் வந்தது. **பெருமான் + தன் = பெருமான்றன்.**

பாட்டு எழுதுவோர் பலர் **உந்தன்** என்றும் **எந்தன்** என்றும் எழுதுகின்றார்கள். **உன்றன்** என்றல்லவா எழுத வேண்டும். **என்றன்** என்றல்லவா எழுத வேண்டும்?

உத்தம் என்றால் பிழையில்லை. எந்தம் என்றால் பிழை யில்லை. **எம்** பன்மை **தம்** பன்மை ஆதலின்.

**சுக்கு, பேச்சு, பட்டு, முத்து, காப்பு, புற்று** என்பன போன்று வரும் சொற்கள், ஏன்? ஈற்றயலெழுத்தை பாருங்கள். வல்லெழுத்தே இல்லையா?

**சுக்கு, பஞ்சு, பண்பு, பந்து, பாம்பு, அன்பு** என்பன போன்று வரும் சொற்கள் எல்லாம் மென்றொடர் குற்றியலுகர சொற்கள். ஏன்? ஈற்றயல் மெல்லெழுத்து!

**செய்து, சார்பு, சால்பு, போழ்து, தென்கு** என்பன போன்று வரும். சொற்கள் எல்லாம் இடைத்தொடர்க் குற்றியலுகரச் சொற்கள். ஏன்? ஈற்றயலெழுத்து இடையெழுத்து.

**அஃது, இஃது, எஃது, இருபஃது** என்பன போன்று வரும் சொற்கள் எல்லாம் ஆய்தத் தொடர் குற்றியலுகரங்கள். ஏன்? ஈற்றயலெழுத்து ஆய்த எழுத்து.

**சகடு, பிகடு, படகு, மதகு, ஒப்பாது, விறகு, பொழுது பெரிது, சிறிது** என்பது போன்று வரும் சொற்கள் எல்லாம் உயிர்தொடர்க் குற்றியலுகரச் சொற்கள், ஏன்?
ஈற்றயலில் **உயிர் எழுத்து.**

**காசு, சாறு, நாடு, ஏது, ஈபு, ஆறு** என்பன போன்று வரும் சொற்கள் எல்லாம் நெடிதொடர்க் குற்றியலுகரங் கள். ஏன்? ஈற்றயலெழுத்துக்கள் நெட்டெழுத்துக்கள்.

ஈற்றயலெழுத்தென்றால் என்ன? **சுக்கு** என்பதன் ஈற் றெழுத்து கு அதன் அய்லெழுத்து.

வல்லெழுத்து எவை? **க், ச், ட், த், ப், ற்** என்ற **ஆறும்.** மெல்லெழுத்தென்றால் எவை? **ங், ஞ், ண் ந், ம், ன்** என்ற ஆறும். இடையெழுத்தென்றால் எவை? **ய், ர், ல், வ், ழ், ள்** என்ற ஆறும் ஆய்த எழுத்து ஃ.

உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் என்பதில் உயிர் என்றது எதை? சகடு என்பதன் ஈற்றயல் எழுத்தாகிய **க** என்பதை, ஏன் எனில் **க்** என்றதன்மேல் **அ** இருக்கிறதே அதைக் குறித்து.

நெடில் எவை? **ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ** அன்றியும் இவை ஏறியதால் உண்டான **கா, கீ, கூ, கே, கௌ** முதலிய அனைத்தும் கொள்க.

இதுவரைக்கும் சொல்லியவற்றால் குற்றியலுகரம் இன்னதென்று புரிந்தது.

இனி, அக்குற்றியலுகரச் சொல்லின் முன்வரும் உயி ரெழுத்து எப்படியாகும் என்பது கூறப்படும்.

**சுக்கு + அரிது = சுக்கரிது.** என்றுகும் சுக்கு என்றதன் ஈற்றிலுள்ளது. **கு** அதன்மேல் ஊற்ற **உ** மறைந்து விட்டது **சுக், க்,** மீந்தது. அதன் கடைசி **க்** மேல் வரும் **அ** ஏறிக் கொள்ளும். **சுக்கரிது** என்று ஆனது காண்க.

இதைத்தான் நன்னூல் ''உயிர்வரின் உக்குறள் மெய் விட்டு ஓடும்'' என்றது! எனவே,

**சுக்கு + அரிது = சுக்கரிது**

**சுக்கு + ஆணம் = சுக்காணம்**

**சுக்கு + இனிது = சுக்கினிது**

**சுக்கு + ஈவாய் = சுக்கீவாய்**

**சங்கு + ஒலி = சங்கொலி**

**சங்கு + ஊதல் = சங்கூதல்**

**செய்து + அளித்தால் = செய்தளித்தார்**

**நாடு + அழகு = நாடழகு**

**நாடு + ஆண்டான் = நாடாண்டான்**

**அஃது + ஏது = அஃதேது**

என்று புணரும்.

பாட்டெழுதுவார் பாட்டெழுதும்போது, **அக்கரிது** என்று புணர்த்தே எழுதவேண்டும்; **சங்கொலி** என்று கூட்டியே எழுதவேண்டும்.

இதை விளக்குவோம்.

அகவல் எழுத—ஓர் அடிக்கு நான்கு சீர் வேண்டும்

''திங்கள் எழுந்தது செங்கதிர் மறைந்தத''

பட என்பது நாற்சீர் வந்த அகவலடி. இதுபோன்ற அகவலடி

எழுதவரும் பாவாணர் **"சங்கு ஒலியும் சாறு ஊற்றம்"** என்று எழுதினுல் பிழையாகும். ஏன்? இப்படிப் பிரித்தெழுதலாகா தன்றோ?

**சங்கு ஒலியும்** என்பன **சங்கொலியும்** என்றுதான் புணரும்.

**"சங்கொ"** ஈரசைச் சொல்போக மீதி **"லியும்"** என்ற ஓரசைச் சொல்லே இருக்கின்றது. ஓரசைச் சொல் அகவலில் வராதன்றோ? அதுபோலவே **சாறு ஊற்றும்** என்பன **சாறூற்றும்** எனப் பிரிதலால் கூறும் ஓரசையாக வந்து அகவலைக் கெடுக்குமன்றோ?

என்று அவர் தாம் வருவார் என்று
அரசி நினைந்து அழுதாள்.
அரசன் வரக் கண்டு அகமகிழ்தானே!

என்பது,

என்றோ அவர்தாம் வருவார் என்றே
அரசி நினைந்தே அழுதாள்
அரசன் வரக்கண் டகமகிழ்ந் தானே!

என்ருவது திருத்தப்பட்டால் பிழையறும்.

குயில் : 9-9-'58

* * *

# இளங் கவிஞர்க்கு

நான் பன்முறை எடுத்துக்காட்டியிருந்தும் இளங்கவிஞர்களில் பெரும்பாலோர் திருந்தவே இல்லை.

1. **உந்தன்** என ஒரு சொல்லே இல்லை
   **உன்றன்** உண்டு; **உந்தம்** உண்டு.
2. வன்றொடர்க் குற்றியலுகரச் சொல்லின் முன் வல்லெழுத்து வந்தால் இடையில் ஒற்று மிக வேண்டும்.

'பாக்குத் தின்ருன்' என்பது போல.

3. **மோதி, பேசி, வருந்தி** என்பன போன்றவை வினையெச்சங்கள். அவற்றின் முன் வரும் வல்லெழுத்து மிகும். **மோதிச் சல சல** என்பதுபோல.

இதற்காக நான் இளங்கவிஞர்கட்குச் சொல்வது என்னவெனில்,

தாம் எழுதியதைத் தம் அருகிலுள்ள புலவர் ஒருவரிடம் காட்டினுல், அவர்கள் திருத்தித் தருவார்கள். இலக்கண அறிவும் உண்டாகும். அதன் பிறகு அதை அனுப்பலாம். இப்படிச் செய்தால் எனக்குத் தொல்லை குறையும். தம் பிழையைப் புலவர் அறியக் கூடாது என்று நினைப்பது தவறு. யாருக்கும் தெரியாமல் ஆசிரியர் திருத்தி வெளியிடுவார். அதை நாமும் படிக்காமலே இருந்து விடலாம் என்ரு நினைப்பது? இனி,

இளங்கவிஞர் கவிதைகளில் உள்ள பிழைகளை வெளிப்படையாகவே திருத்த எண்ணியிருக்கின்றேன்.

[சான்ருக கீழ்வரும் வேற்ருர் ஒருவர் பாடலைக் காண்க]

### ஏக்கத்தின் எல்லை

''ஆர்க்கின்ற அலைகடலில் ஆழ்ந்திருக்கும்
அழகான வெண்முத்து பலவெ டுத்து
கோர்த்தெடுத்த கவினைப்போல் காட்சி நல்கும்
குன்ருஉன் பல்வரிசை! குருதி கொட்டும்
போர்க்களத்தில் அண்டலரின் ஆகம் மீளும்
பொற்றமிழன் அயிலன்ன வண்டி ரண்டும்
பார்க்கின்ற காளையெந்தன் உயிர் பறித்து
பறந்திடுதே தொலையுலகு; செய்வ தென்னே!'

பிழையும் திருத்தமும் காண்க:

**முத்து +பல** எடுத்து என்பது
முத்துப்பல எடுத்து என்றிருக்க வேண்டும்.
முத்து வன்றொடர்க் குற்றியலுகரம்.

**எடுத்து+கோர்த்து** எடுத்துக் கோர்த்து
**கோர்த்து** என்றே ஒரு சொல் இல்லை
**கோத்து** எனல் வேண்டும்.
**கோர்வை** என்பதும் பிழை
**கோவை** எனல் வேண்டும்
**கோ** என்பது முதனிலை ஆதலால்,
**எந்தன்** பிழை; **என்றன்** சரி.
**பறித்து+பறந்=**பறித்துப்பறந்

குரல் : 3 குயில் - 31-1-61 இசை : 33

* * *

## ஒருவள் என்று எழுதுக

**''ஒருத்தரைம திப்பதில்லை உன்றன் அருளாலே''** என்று திருப்புகழில் வருகின்றது. **''ஒன்றவன்தானே''** என்று திரு மந்திரத்தில் வருகின்றது.

**ஒருவன், ஒருத்தி** என்று வரவேண்டும் என்ற தொல் காப்பியக் கட்டுப்பாட்டை மீறியவை இவை. **ஒருவர்** எனற் பாலது **ஒருத்தர்** என வந்ததன்றோ? **ஒருவன்** எனப்பாலது **ஒன்றவன்** என வந்ததன்றோ?
இனி,

ஒருத்தி என வரவேண்டியதை **'ஒருவள்'** என வரும் வகை விடுவதில் குற்றம் ஒன்றும் நேராது என்பதே என் கருத்து. **ஒருவள், ஒருவளை, ஒருவளால், ஒருவளுக்கு, ஒருவளின், ஒருவளது, ஒருவளிடம், ஒருவளே** என, எட்டு வேற்றுமைக்கும் வரும்படி எழுத்தாளர் எழுதுவதை நான் எதிர்க்கவில்லை.

குரல் 3 குயில் 7—2—1961 இசை 34

* * *

## கவிஞர் நினைவிற்கு

**எந்தன், உந்தன்** என்று தமிழில் சொற்களே இல்லை. இதை முன் ஒருமுறை விளக்கியுள்ளோம். இவ்வாறு உள்ள பிழைச் சொற்களை படித்தவர்களே எழுதுவதென்றால், இராஜகோபாலாச்சாரியாருக்கும் இவர்களுக்கும் என்ன வேறுபாடு?

**எம்** என்பது பன்மைச் சொல். அதனோடு பன்மைக் குரிய **தம்** என்பதுதான் சேரும். எனவே **எந்தம்** என்று எழுத வேண்டும். **உந்தம்** என்பதும் அப்படியே.

**என்** என்பதும் **உன்** என்பதும் ஒருமைக்குரியவை. இவற்றோடு ஒருமைக்குரிய **தன்** சேர வேண்டும். எனவே **என்றன், உன்றன்** என எழுத வேண்டும்.

**போக, வர, இருக்க என** இவ்வாறு வரும் சொற்களுக்குச் செய் என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம் அல்லது (சுருக்கமாய்) செயவெனெச்சம் என்பார்கள். இவற்றிற்கு முன் வல்லெழுத்துக்கள் அவையாவன **க, ச, த, ப** என்பவை வந்தால் மிக வேண்டும். எப்படி?

**போக + கண்டான்** = போகக் கண்டான்.
வரச்சொன்னான், இருக்கின்றான், எனப் பகிர்ந்தான் என.

**க, ச, த, ப,** என்று கூறினால் **(க) கா, கி** முதலியவற்றை யும் **(ச) சா, சி** முதலியவற்றையும் **(த) தா, தி** முதலியவற்றை யும் குறிக்கும். கவிதை எழுதக் கசடறக் கற்க.

என்பது அகவலடி. இதில் எழுத என்னும் செயவெனெச் சத்தின் முன் **க** என்ற வல்லெழுத்து வந்ததால் **எழுதக் கசடற** என மிகுந்தது. **அறக்கற்க** என்பதில் **அற** என்பது செயவெனெச்சம்! அதன் முன் **'க்'** என்னும் வல்லெழுத்து வந்ததால் அறக்கற்க என மிகுந்தது.

அழகுக் கழகு கூட்டுவார் போலக்
குழந்தைக்குப் பன்மணி இழைகள் கூட்டினர்.

என்பது அகவலின் இரண்டடி. முதலடியின் கடைசியில் உள்ள **போல** என்பது செயவெனெச்சம். அதன்முன் இரண்டாம் **அடி** யின் முதலிலுள்ள வல்லெழுத்து வந்தது. அதனால் **போல + குழந்தை, போலக் குழந்தை** என மிகுந்தது.

கவிஞர்கள் சிலர்—பாட்டில் வரும் ஓரடி கடைசி சொல் லையும் அடுத்த அடியில் வரும் முதற் சொல்லையும் தொடர்பு படுத்திப் பார்ப்பதே இல்லை. அப்படியானால் இவர்கட்கும் சுதேசமித்திரன் தினமணிக்கும் என்ன வேறுபாடு?

அகரத்தை, அதாவது **'அ'** என்பதை ஈற்றிலுடைய சில சொற்களின் முன் வல்லினம் **(க, ச, த, ப)** வந்தால் இயல் பாகும் என்பதற்கு நன்னூற் பாட்டு ஒன்றுண்டு.

''செய்யிய என்னும் வினையெச்சம் பல்வகைப்
பெயரின் எச்சம் முற்று, ஆறனுருபே
அஃறிணைப் பன்மை அம்ம—முன் இயல்பே.''

செய்யிய சென்றான் என்பதில் செய்யிய என்பது வினையெச்சம். **உண்ணிய, காணிய** என்பன முதலியனவும், அவ்வினையெச்சங்களே! செய்யிய சென்றான், உண்ணிய போனான், காணிய சென்றான் என இயல்பாகும்.

வந்த குதிரை, வருகின்ற குதிரை என்பனவற்றில் உள்ள வந்த, வருகின்ற என்பன குதிரை என்ற பெயரைக் கொண்டு முடிவதால் வந்த, வருகின்ற என்பன பெயரெச்சங்கள். இவற்றின் முன் வல்லினம் வந்தால் வந்த குதிரைஎன இயல்பாகும். வந்த, வருகின்ற, போகின்ற, போன என்பன போன்றவையும் பெயரெச்சங்களே.

வந்தன குதிரைகள், வருகின்ற குதிரைகள் என்பனவற்றில் வந்தன, வருகின்ற என்பவை முற்று. வந்தாள், வந்தான், வந்தார், வந்தது எனப் பலமுற்றுக்கள் உள்ளன. அவைகளைப் பற்றி இங்கே பேச்சில்லை.

அகரத்தை இறுதியாக உடைய வந்தன முதலியவைகளைப் பற்றித்தானே இங்கே கூற வந்தது.

வந்தன குதிரை இடையில் ஏற்று மிகாது. வந்தன குதிரை என்றே எழுத வேண்டும்.

செய்தன, செய்கின்ற, உண்டன, உண்ணுகின்றன அனைத்தும் முற்றுக்களே!

தன கைகள் என்றது தன்னுடைய நகைகள் என்ற பொருளுடையது. தன என்பதின் இறுதியில் உள்ள 'அ' ஆறும் வேற்றுமையின் பன்மையுருபு. இதன் முன் வல்லினம் வந்தால் இடையில் ஏற்றுமிகாது. தன கைகள் என்று இயல்பாகும். **என, உன** என்பன அனைத்தும் ஆறும் உருபைக் கொண்டனவே.

அம்ம கொற்றா என்பது இடைச்சொற்றொடர். **அம்ம** என்பது வியப்பைக் குறிக்க வரும் இடைச்சொல். இடையில் ஏற்றுமிகாது.

**க்கு, ச்சு, ட்டு, த்து, ப்பு, ற்று** இவைகளைக் கடைசியில் வைத்துக் கொண்டு வருகின்ற சொற்கள் அனைத்தும் வன்றொடர்க் குற்றியலுகரச் சொற்களே யாகும். சுக்கு, பாக்கு, உப்பு, காப்பு, தச்சு, நீச்சு, பட்டு, பாட்டு; முத்து, கூத்து, புற்று, நேற்று என்பனவும் இவைபோன்ற பிறவும் வன்றொடர்க் குற்றியலுகரச் சொற்களே. இவற்றின் முன் வரும் வல்லெழுத்து மிகும்—எப்படி.

சுக்கு**த்** தின்றான். பாக்கு**ப்** போட்டுக் கொண்டான். தச்சு**ப்**பொருள், நீச்சு**ப்** பந்தயம் என. சுக்கு தின்றான் என வரவே வராது. போயிற்றுக் குதிரை என்பதில் போயிற்று என்பதும் வன்றொடர்க் குற்றியலுகரமே. ஆயிற்று, உவிற்று என்பனவும் அவையே.

ஆயினும் கூப்புகை, நாட்டு புகழ் என்பன மேற்சொல்லியதுபோல் மிகாது. கூப்பு கை, நாட்டு புகழ் என இயல்பாகவே இருக்கும். ஏன் எனில்,

கூப்பு கை, நாட்டு புகழ் என்பன வினைத்தொகை நிலைத் தொடர்கள். கூப்புக்கை என்பது கூப்புகின்ற கை, கூப்பிய கை, கூப்பும் கை என மூன்று காலத்திற்கும் ஒத்து வருவதால் வினைத்தொகை. நாட்டு புகழ் என்பனவும் அப்படியே.

கூப்புக்கை, நாட்டுப்புகழ் என்று போடவே கூடாது. நாட்டின் புகழ் என்பதில் 'ப்' இடையில் போடலாம்.

அங்கு, இங்கு, உங்கு, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, எங்கு, யாங்கு, ஆண்டு, ஈண்டு, யாண்டு என்பன இடைப்பொருளில் வரும், மென்றொடர்க் குற்றியலுகரங்கள் இவைகளின் முன் வரும் வல்லினம் மிகும். எப்படி? அங்கு**க்** கண்டான், இங்கு**ச்** சேர்ந்தான், ஆண்டு**ச்** சென்றான், ஈண்டு**ப்** போந்தான் என.

''ஆங்கு அவன்தான் அழகு அழிந்தான்''

ஒருவர் எழுதிய அகவல் அடி இது.

அகவல் அடியில் நான்கு சீர்கள் வரவேண்டும். இதில் வந்துள்ளனவா எனில் இல்லை. ஏன்?

**ஆங்கு+அவன்=ஆங்கவன்** என்று புணர வேண்டும். இப்படி புணர்த்தவே இரண்டு சீரும் ஒரு சீராகின்றது. **அழகு அழித்தான்** என்பது **அழகழித்தான்** எனப் புணரும்.

''ஆங்கவன் தான் அழ கழித்தான்'' என்ற மூன்று சீர்தாம் உள்ளன. இன்னும் ஒரு சீர் வேண்டும். எங்கே போவது! பிழைதானே! இந்த அடியை எப்படித் திருத்தினால் பிழையிராது எனில்,

''ஆங்கே அவன்தான் அழகை அழித்தான்'' எனில் பிழை இல்லை.

சொற்களைப் பிரித்து எளிதில் பொருள் விளங்குவதற்காக எழுதுவதாய் நினைக்கின்றார்கள். **பிரித்து எழுதலாம். அதைப் புணர்த்திப் பார்க்கும்போது அளவு குறையக்கூடாது.**

இந்தப் பிழைகளைப் புகழ் பெற்றவர் என்று கருதப்படும் கவிஞர்களும் செய்கின்றார்கள்.

மரத்தில் அதோ பார் பறவைக்கூடு
அதுமிக அழகாய் இல்லையா அண்ணே

என்பன அகவல் அடிகள். இவற்றில் முதலடியின் கடைசிச் சொல் கூடு என்பது. அது குற்றியலுகரம். அடுத்த அடியின் முதலிலுள்ள அது என்பதில் உள்ள அகரத்தோடு புணர வேண்டும். **கூடு+அது=கூடது** என்று. எனவே கூடு என்பது தன்—**டு** இல்லாமற் போகின்றது. கூ மட்டும் மிஞ்சுகிறது.

மரத்தில் அதோ பார் பறவைக் கூ என்றால் **கூ** மட்டும் ஒரு சீரல்ல. இன்னும் ஓரெழுத்தாவது வேண்டும். மரத்தில் அதோ பார் பறவைக் கூடே என்று திருத்திக் கொண்டால் பிழை நேராது.



* * *

# பாட்டுக்கு இலக்கணம்

பாட்டு என்றால் என்ன?

அறிவிற் சிறந்தவர்கள் பல சொற்களை வைத்து அழகு அமைய ஒரு பொருளைப் பற்றிப் பாடுவது பாட்டு.

**...சொல்லால் பொருட்கிடனாக உணர்வின் வல்லோர் அணி பெறச் செய்வன செய்யுள்** என்ற நன்னூல் அடியை நினைவில் வைத்துக் கொள்க.

பாட்டு, பாடல், செய்யுள் அனைத்துக்கும் பொருள் ஒன்றே.

பாட்டு இன்னது என்பது ஒருவாறு புரிந்தது.

இனி அப்பாட்டுக்கு இலக்கணத்தைக் கூறுமுன் பாட்டுக்கு இலக்கணம் படிக்க வேண்டும் என்பது பற்றிக் கூறுகின்றேன்.

பாட்டு எழுத இலக்கணம் தேவை இல்லை என்று இக் காலத்தில் சிலர் கூறுகிறார்கள். அது தவறு. இலக்கணம் தேவை. இலக்கணம் தெரியாதவர்களும் பாட்டு எழுதுகிறார்கள்; எழுத முடியும் என்று கூறுகின்றவர்கள் ஊன்றி நோக்காது மேலெழுந்தவாரியாகக் கருதினார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஊற்றுக் கண்டதும் அதைக் கிணறு, ஊருணி என்று கூறிவிடலாகாது. ஊறிய ஊற்று ஓர் ஒழுங்கிற்கு உட்பட வேண்டும். சேறு எடுக்க வேண்டும். பக்கங்கள் அமைக்க வேண்டும். அதன் பிறகுதான் அது கிணறு அல்லது ஊருணி.

ஒழுங்கு பெறாத ஊற்றால் எதிர்பார்த்த பயன் கிடைக்காதது போலக் கல்லாதான் கற்ற கவியும் பயன் தராது. படிக்காதவர், யாப்பிலக்கணம் பயிலாதவர் எழுதும் பாட்டு நன்றாகவே இருந்தது. எனினும் அறிவுடையார் அதை ஒப்ப மாட்டார் என்பது திருவள்ளுவர் கருத்தாகும்.

**''கல்லாதான் ஒட்பம் கழிய நன்ருயினும்**
**கொள்ளார் அறிவுடை யார்.''**

என்றது காண்க.

பாட்டுக்கு இலக்கணம் பயில எண்ணுவோர் பாட்டுக்கு இலக்கணம் பயில வேண்டியது இன்றியமையாதது என்று நம்ப வேண்டும். இலக்கணம் தெரிந்துகொள்ளாமலேயே பாட்டு எழுதலாம் என்பதை அறவே மறந்துவிட வேண்டும்.

இன்ஞென்று முதலில் சொல்லி விடுகின்றேன். சொல்லிக் கொண்டே வரும்போது முன்னே சொன்னதை மறந்து விடக் கூடாது.

நினைவாற்றல் இன்றியமையாதது.

## க. எழுத்திலக்கணம்
## அசை இன்ன தென்பது

**அ**

இது தமிழ் எழுத்துக்களின் வரிசையில் முன்னிருப்பது. வாயைத் திறப்பதிஞலேயே தோன்றிவிடும்.

க், ங், ச், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்ற 18 மெய்யின் மேலும் தனித்தனி ஏறி, அவைகளை க, ங, —ன என்று ஆக்குகின்ற நிலையை எண்ணி இதை **உயிர்** என்று சொல்ல வேண்டும். மற்ற நேரத்தில் **''அ''** என்ற எழுத்து மட்டும் சொல்லுக.

**க்+அ=க; ன்+அ=ன.**

மெய் எழுத்து என்ருல் உயிரில்லாத உடம்பு எழுத்து என்பது பொருள். இந்த மெய் எழுத்தைச் சொல்லிக் காட்ட முடியாது. உயிர் கூட்டித்தான் சொல்லிக் காட்டமுடியும்.

**க் ங்** முதலிய 216 எழுத்துக்களுக்கும் உயிர்மெய் எழுத்துக்கள் என்று பெயர், உயிரும் மெய்யும் கூடிப் பிறந்ததிஞல்!

அ என்ற எழுத்துக்கு மெய் எழுத்தை இயக்குவது தவிர வேறு இல்லை இல்லையா?—உண்டு.

அவன், அவள், அவர், அது, அவை, அம்மனிதன், அப் பெண், அம்மனிதர், அக்கன்று, அக்குருவிகள் என்பவை சுட்டுப் பெயர்கள்.

ஒன்றைச் சுட்டிக் காட்டுவதால் இந்தச் சுட்டுப் பெயர் களில் எல்லாம் முதலில் **'அ'** இருக்கிறது.

எனவே இங்கு 'அ' என்ற எழுத்துச் சுட்டுப் பொருளில் வந்தது.

இப்போது **அ** என்ற எழுத்து உயிர் எழுத்தா? இல்லை. **சுட்டெழுத்து.**

அதனால்தான் **அ** ஒரு பொருளைச் சுட்டிக் காட்டும் போது சுட்டெழுத்து என்று சொல்லப்படும். சுட்டாத போது **'அ'** என்ற எழுத்து என்றுதான் சொல்ல வேண்டும்.

அ எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பன பாட்டின் ஆறு உறுப்புக்கள்.

அவற்றில் இது (அ) அசையாய் வரும். இது தனியாய் வந்தாலும், அசைதான். ஒரு மெய் எழுத்தைக்கூடச் சேர்த் துக் கொண்டு வந்தாலும் அசைதான். **அ,** அல்லது **அக், அங், அச், அஞ், அன்** என்று இவைகளுக்கு நேரசை என்று பெயர்.

**அச்சம்** என்பதில் இரண்டு நேரசைகள் இருக்கின்றன. **அச்** ஒன்று, **சம்** ஒன்று. **அ, அ** இரண்டும் இரண்டும் என்பதில் முதலில் உள்ள **அ** என்பதும் நேரசை.

மேலும் **அ** என்பது **குற்றெழுத்து.** குறில் என்றும் சொல்வதுண்டு. எனவே **அ** என்ற குறில் தனித்து வந்தா லும், ஒரு மெய்யைச் சேர்த்துக் கொண்டு வந்தாலும் நேரசை என்று நினைவில் வைத்துக் கொள்க.

இதுபோலவே **அ, இ, உ, எ, ஒ** என்ற எழுத்துக்களும் **குற்றெழுத்துக்களே.** இவைகளும் தனித்து வந்தாலும், மெய் எழுத்தைச் சேர்த்துக் கொண்டு வந்தாலும் **நேரசைகளே.**

**எடுத்துக் காட்டு:-**

அ அச், இ, இச், உ, உஞ், எ, **எம்**—இந்த ஐந்து தவிர இன்னும் குற்றெழுத்துக்கள் இருக்கின்றன. அவை யாவன.

**அ** என்ற உயிரேறிய **க்** அதாவது **க** என்ற உயிர்மெய் எழுத்தும் குற்றெழுத்தே. மேலும் 18 மெய்யின் மேலும் 5 குறிலும் தனித்தனி ஏறத் தோன்றுகின்ற 90உம் குற்றெழுத்துக்களே என அறிக.

இப்போது நேரசை எவ்வளவு ஆகிவிட்டது **பாருங்கள்.**

**90** உயிர் மெய்க்குறிலும் **5 உயிர்க்** குறிலும் தனித்தோ, மெய்யைச் சேர்த்துக் கொண்டோ வந்தால் அவை எல்லாம் அசை. அதாவது, குறிலசை.

மேலும் நேரசை.

அ ஓரசை, அம் ஓரசை, க ஓரசை, கண் ஓரசை, ப ஓரசை, பல் ஓரசை என்று நினைவில் கொள்க.

**ஆ** இதுவும் மெய்யெழுத்துக்கு உயிர் தரும்போது உயிர் எழுத்து எனப்படும்

**ஆ** தனித்து வந்தாலும் ஒற்றடுத்து வந்தாலும் **நேரசை** எனப்படும்.

ஆ தனித்து வந்தது. ஆக், ஆங் ஒற்றடுத்து வந்தன. அ என்பதற்கும் ஆ என்பதற்கும் வேறுபாடு என்ன?

அ **குறில்;** ஆ **நெடில்.** ஆ என்பது நீண்ட ஓசை உடையது அல்லவா. இனி,

ஆ ஏறியதால் உண்டாகும் **கா, ஙா** முதலியனவும் **நெட்டெழுத்துக்களே.**

ஆ என்ற நெட்டெழுத்துக்கும் கா, ஙா முதலிய நெட்டெழுத்துக்கும் வேறுபாடு என்ன? ஆ உயிர் நெட்டெழுத்து. **கா, ஙா** முதலியவை **உயிர் மெய் நெட்டெழுத்துக்கள்.**

பயிற்சி:

உயிர்க் குற்றெழுத்துக்கள் எவை? **அ, இ, உ, எ, ஒ** ஆகிய 5.

உயிர்மெய் குற்றெழுத்துக்ள் எவை?

**க, கி, கு, கெ, கொ, ங, ஙி, ஙு, ஙெ, ஙொ, ச, சி, சு, சொ முதலிய 90.**

எனவே **குற்றெழுத்துக்கள் 95.** உயிர் நெட்டெழுத்துக்கள் எவை?

**ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, ஓ, ஔ** ஆகியவை.

உயிர்மெய் நெட்டெழுத்துக்கள் எவை?

**கா, கீ, கூ, கே, கை, கோ, கௌ.**

**ஙா, ஙீ, ஙூ, ஙே, ஙை, ஙோ, ஙௌ.**

**சா, சீ, சூ, சே, சை, சோ, சௌ.**

**ஞா, ஞி, ஞீ, ஞூ, ஞே, ஞை, ஞோ, ஞௌ.**

18 + 7 = 126 என்க. இதனோடு உயிர் நெட்டெழுத்துக்களையும் சேர்த்து 133 என்க.

நெட்டெழுத்துக்கள் 133—ம், குற்றெழுத்துக்கள் 95—ம் சேர்த்தால் 133 + 95 = 228 ஆகும்.

இந்த 228 எழுத்துக்களும் தனித்து வந்தாலும், ஒற்றடுத்து வந்தாலும் நேரசைகள்.

**அ. தனித்து வந்த நேரசை.**

**அம். ஒற்றடுத்து வந்த நேரசை. ஆ தனித்து வந்த நேரசை. ஆம் ஒற்றடுத்து வந்த நேரசை** என நினைவில் வைத்துக் கொள்க.

பயிற்சி:

**அன்றில்** என்பதில் **அன், றில்** என இரண்டு நேரசைகள் வந்தன. ஆண்பால் என்பதில் ஆண், பால் என இரு நேரசைகள் வந்தன. **தாரா** என்பதில், **தா, ரா** இரு நேரசைகள் வந்தன. **காண்பார்** என்பதில் **காண், பார்** என இரு நேரசைகள் வந்தன. **பார்க்க,** என்பதில் **பார்க், க** என இரு நேரசைகள் வந்தன.

**நிரையசை :**

இதுவரைக்கும் நேரசை விளக்கப்பட்டது. இனி நிரையசை வருமாறு:

இரண்டு குற்றெழுத்து வந்தால் நிரையசை. **முட, நடு, பழ** என்பவையும் பிறவும். அதுமட்டுமல்ல.

இந்த இரு குற்றெழுத்தும் ஒற்றடுத்து வந்தாலும் அவை நிரையசைகள்.

**கடல், நடும், பழம், கட** என்ற இரு குறில் என்பதைச் சேர்த்துக்கொண்டு வந்தது காண்க.

அதுமட்டுமல்ல. ஒரு குறிலும் ஒரு நெடிலும் சேர்ந்து வந்தாலும் நிரையசையே. **கடா, தடா, விடா** இவற்றில் **க** என்பது குறில், **டா** என்பது நெடில். இரண்டும் சேர்ந்து **கடா** என வந்தது. ஆகவே அது நிரையசை. அதுமட்டுமா?

அந்த ஒரு குறில் ஒரு நெடில் ஒற்றடுத்து வந்தாலும் நிரையசையே.

**படாக், தடார், விடார்** இவற்றில் ஒரு குறில், ஒரு நெடில் ஒற்றடுத்து வந்தன காண்க.

இதுவரைக்கும் சொல்லி வந்த நேரசை நிரையசை இரண்டையும் நேர், நிரை என்றும் சொல்வதுண்டு.

**பயிற்சி :**

வாக்குண்டாம்—இருப்பவை என்ன? — **வாக்**—நேர், **குண்**—நேர், **டாம்**—நேர். மூன்று நேர் இருக்கின்றன. நல்ல என்பதில் **நல், ல** இரண்டு நேர் இருக்கின்றன. **மன** முண்டாம் என்பதில் **மன**—நிரை; **முண்**—நேர்; **டாம்** —நேர். ஒரு நிரை இரு நேர் உள்ளன.

மாமலராள்—நேர் நிரை நேர் உள்ளன.
நோக்குண்டாம்—நேர், நேர், நேர் உள்ளன.
மேனி—நேர், நேர்.
நுடங்காது நிரை—நேர், நேர்.
பூக்கொண்டு—நேர், நேர், நேர்.
துப்பார்—நேர், நேர்.
திருமேனி—நிரை நேர், நேர்
தும்பிக்கை—நேர், நேர், நேர்
யான், பாதம்—நேர், நேர், நேர்
தப்பாமல்—நேர், நேர், நேர்
சார்வார்—நேர் நேர்
தமக்கு—நிரை நேர்.

இதுவரைக்கும் நீங்கள் நேரசை, நிரையசை இன்னது என்று தெரிந்து கொண்டீர்கள்.

**சீர்**

இனிச் சீர் பற்றிக் கூறுகின்றேன். **ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர்** எனச் சீர் நான்கு வகைப்படும்.

ஓரசைச்சீர் காட்டுகின்றேன்.

''மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்''

இதில் கடைசியில் வந்துள்ள **வார்** என்பது ஓரசைச்சீர். மேலும் நேரசை.

''கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்''

இதில் கடைசியிலுள்ள **எனின்** என்பது ஓரசைச்சீர். மேலும் நிரையசை.

ஈரசை வந்ததைக் காட்டுகின்றேன்.

'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே'

முதலடியில் நான்கு சீர்களும் இரண்டாம் அடியில் நான்கு சீர்களும் வந்துள்ளன. அவையனைத்தும் ஈரசைச் சீர்களே.

கற்கை—நேர், நேர். நன்றே—நேர், நேர்.
பிச்சை—நேர், நேர். புகினும்—நிரை நேர்.

எனவே எட்டுச் சீர்களும் ஈரசைச் சீர்கள் ஆனமைக் காண்க.

மூவசைச்சீர் காட்டுகின்றேன்:

காடைக்கு கானீளம் காக்கைக்கு வாய்நீளம்
பாடைக்குக் கோல்நீளம் பச்சையப்பா—நாடிப்பாப்
பாம்புக்குப் பல்நீளம் பாட்டுக்குப் பண்நீளம்
வேம்புக்கு வேர்நீளம் ஆகும்.

இது வெண்பா.

இதில் முதலடியில் நான்கு சீரும், இரண்டாம் அடியில் நான்கு சீரும், மூன்றும் அடியில் நான்கு சீரும், நான்காம் அடியில் இரண்டு சீரும் ஆம் என்ற ஓரசைச் சீரும் வந்துள்ள.

கா, டைக், குக்—நேர், நேர், நோ ஆகிய மூவசைச் சீர் வந்தது காண்க.

கானீளம்—கா, னீ, ளம்—நேர் நேர் நேர். ஆ இதுவும் மூவசைச் சீர். கடைசியிலுள்ள ஆம் என்பது மட்டும் ஓரசைச்சீர். மற்றவை அனைத்தும் மூவசைச் சீர்கள் என்க.

நமர் பயில்வது—தமிழ் மொழியென நவிலாயோ, என்ற அடியில் நமர் பயில்வது நிரை, நிரை, நிரை. தமிழ் மொழியென—நிரை, நிரை, நிரை. நவிலாயோ—நிரை நேர் நேர் என அனைத்துச் சீர்களும் மூவசைச் சீர்களே ஆயின.

சீர் பற்றி இன்னும் சில சொல்லப்படும்.

நேர் நேர் என்ற ஈரசைகளையும் சேர்த்துச் சொல்வதற்குப் பதிலாக **தேமா** என்று சொல்லிக் கொள்ளலாம்.

இது நினைவிற்காக ஏற்படுத்திக் கொண்டது வாய்ப்பாடு என்பார்கள்.

**நேர் நேர் = தேமா**

**நிரை நேர் = புளிமா**

**நிரை நிரை = கருவிளம்**

**நேர் நிரை = கூவிளம்**

பயிற்சி:—**தேமா** என்பதில் **தே** என்பது நேர். **மா** என்பதும் நேர் என்க.

**புளிமா** என்பதில் **புளி** நிரை. **மா** நேர் என அறிக.

கருவிளம் என்பதில் **கரு,** நிரை. **விளம்** என்பது நிரை என அறிக.

**கூவிளம்** என்பதில் **கூ** என்பது நேர். **விளம்** என்பது நிரை என அறிக.

தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்ற நான்கும் ஈரசைச் சீர்கள்.

மேலும்,

தேமா, புளிமா என்ற இரண்டின் இறுதியிலும் **மா** என்று வருவதால் இவ்விரண்டையும் **மாச்சீர்** எனல் வேண்டும்.

பயிற்சிக் கேள்விகள்:

ஈரசைச்சீர் எத்தனை?

ஈரசைச் சீர் **தேமா, புளிமா, கருவிளம், கூவிளம்** என நான்கு.

இந்த நான்கை இரண்டு பிரிவாகச் சொல்லிக் காட்டு:

தேமா, புளிமா, **மாச்சீர்** என்றும், கூவிளம் கருவிளம், **விளச்சீர்** என்றும் சொல்லப்படும்.

இனி மூவசைச் சீர் காட்டப்படும்.

மூவசைச்சீர் :

நேர் நேர் நேர் என்பதும், நிரை நேர், நேர் என்பதும், நிரை, நிரை, நேர் என்பதும், நேர் நிரை நேர் என்பதும், நேர், நேர், நிரை என்பதும், நிரை நேர் நிரை என்பதும், நிரை நிரை நிரை என்பதும், நேர் நிரை நிரை என்பதும் ஆகிய எட்டும் மூவசைச் சீர்கள்.

இவற்றிற்கு வாய்பாடுகள் வருமாறு:

| | | |
|---|---|---|
| **நேர் நேர் நேர்** | = | **தேமாங்காய்** |
| **நிரை நேர் நேர்** | = | **புளிமாங்காய்** |
| **நிரை நிரை நேர்** | = | **கருவிளங்காய்** |
| **நேர் நிரை நேர்** | = | **கூவிளங்காய்** |
| **நேர் நேர் நிரை** | = | **புளிமாங்கனி** |
| **நிரை நிரை நிரை** | = | **கருவிளங்கனி** |
| **நேர் நிரை நிரை** | = | **கூவிளங்கனி** |

**ஆகிய எட்டு.**

இந்த எட்டையும் இரு பிரிவாக்கிச் சொல்லப்படும். **தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய்** ஆகிய இந்த நான்கும் **காய்ச்சீர்** எனப்படும். இறுதியில் **காய்** என்று முடிவதால்

**தேமாங்கனி, புளிமாங்கனி, கூவிளங்கனி, கருவிளங்கனி** இவைகளைக் **கனிச்சீர்** என வேண்டும், **கனி** என்று முடிவதால்.

இனி நாலசைச்சீர் வருமாறு:

நேர் நேர் நேர் நேர் இப்படி நாலசை சேர்ந்து வரு மானால் அதை நாலசைச்சீர் என்று சொல்லுவர். அதன் வாய்ப்பாடு பின்வருமாறு:

தேமாந் தண்பூ என்பது

நாலசைச் சீர் 16 ஆகும். அவை வருமாறு :

நேர் நேர் நேர் நேர் — தேமாந் தண்பூ
நிரை நேர் நேர் நேர் — புளிமாந் தாண்பூ
நிரை நிரை நேர் நேர் — கருவிளந் தண்பூ
நேர் நிரை நேர் நேர் — கூவிளந் தண்பூ
நேர் நேர் நிரை நேர் — தேமா நறும்பூ
நிரை நேர் நிரை நேர் — புளிமா நறும்பூ
நிரை நிரை நிரை நேர் — கருவிள நறும்பூ
நேர் நிரை நிரை நேர் — கூவிள நறும்பூ
நேர் நேர் நேர் நிரை — தேமாந் தண்ணிழல்
நிரை நேர் நேர் நிரை — புளிமாந் தண்ணிழல்
நிரை நிரை நேர் நிரை — கருவிளந் தண்ணிழல்
நேர் நிரை நேர் நிரை — கூவிளந் தண்ணிழல்.
நேர் நேர் நிரை நிரை — தேமா நறுநிழல்
நிரை நேர் நிரை நிரை — புளிமா நறுநிழல்
நிரை நிரை நிரை நிரை— கருவிள நறுநிழல்
நேர் நிரை நிரை நிரை — கூவிள நறுநிழல்

**பூ** என்று முடிகின்ற எட்டும், **நிழல்** என்று முடிகின்ற எட்டும ஆகிய பதினாறும் நாலசைச் சீர்கள் என்று நினைவில் பதிக்க.

இதுவரைக்கும் எழுத்து, அசை, சீர் என்பன பற்றி பார்த்தோம். இனித், தளை பற்றிக் கூறப்படும். **சீர் ஒன்றோடு ஒன்று சேர்ந்து வருவது தளை**. நேர் நேரோடும், நிரை நிரை யோடும் பொருந்தி வருவதும் நேர் நிரையோடும், நிரை நேரோடும் பொருந்தி வருவதும் தளை ஆயின.

''அம்மா என்றன் ஆசை என்றன்'' என்பது! அகவல் அடி. அதில் **அம்மா** என்பது நேர் நேர்; அதாவது தேமா. **என்றன்** என்பது நேர் நேர். அதாவது **தேமா.**

எனவே,

நேர் என்பதோடு நேர் ஒன்றிய தளை! நேர் நேர் என்பதில் கடைசியில் நேர் இருப்பது காண்க.

இன்னும்,

''வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்'' என்பது வெண்பா அடி

**வாக்குண்டாம்** என்பது தேமாங்காய். அதாவது நேர் நேர் நேர். அதனோடு **நல்ல** அதாவது தேமா நேர் நேர்வந்தது.

இதைக் காயுடன்-அதாவது நேர் நேர் நேருடன் நேர் வந்து ஒன்றியது—இதையும் தளை என்று காண்க.

தளை என்பது பற்றி இவ்வளவு மட்டும் தெரிந்துகொண்டால் போதும்.

## அடி

இனி அடியைப் பற்றிச் சொல்லப்படும். அடி என்பது மேற்சொன்ன தளை ஒன்றை ஒன்று அடுத்து வருவது.

செய்யுட்களில் இருசீர் கொண்ட அடியும், முச்சீர் கொண்ட அடியும், கொண்ட நற்சீர் கொண்ட அடியும், ஐஞ்சீர் கொண்ட அடியும், ஐந்துக்கு மேற்பட்ட சீர்களைக் கொண்ட அடியும் வரும். மேலும் செய்யுட்களில்,

இரண்டடி கொண்ட செய்யுட்களும், மூன்றடி கொண்ட செய்யுட்களும், நான்கடி கொண்ட செய்யுட்களும், பல அடிகள் கொண்ட செய்யுட்களும் உண்டு.

அடிப்பற்றி இவ்வளவே தெரிந்து கொண்டாற் போதும். சுருக்கமாக இதுவரைக்கும் சொல்லி வந்தவற்றை மறக்காமல் இருக்க வேண்டும்.

இனி, இப்படி அமைந்தது இன்ன செய்யுள் என்றும், இப்படி அமைய வேண்டும் இன்ன செய்யுள் என்பனவற்றை சொல்லப்படும். **தொடை** என்பது பற்றி இனி காண்போம்.

**வெண்பா**

காய்முன் நேர் வரவேண்டும். மாமுன் நிரை வர வேண்டும்.

வாக்குண்டாம் நல்ல—என்பதில் **வாக்குண்டாம்** என்பது தேமாங்காய்.

**நல்ல** என்பதில் முதலில் நேர் இருக்கிறது. இதைத் தான் காய்முன் நேர் வரவேண்டும் என்பது.

நல்ல மனமுண்டாம் என்பதில் **நல்ல** என்பது மா **மன முண்டாம்** என்பதின் முதலில் நிரை இருக்கின்றது. இதைத் தான் மாமுன் நிரை வரவேண்டும் என்றது.

இவ்வளவு சொல்லிவிட்டால் போதாது. வெண்பா வில் நேரிசை வெண்பா என்பது ஒன்று. வாக்குண்டாம் என்று தொடங்கும் பாட்டெல்லாம் வெண்பாதான். அதிலும் அதுதான் நேரிசை வெண்பா.

நேரிசை வெண்பாவிற்கு நான்கு அடிவரும். அந்த நாலடியில் முதலடி நாற்சீரடி. அடுத்த அடி முச்சீரடி. அந்த முச்சீரடியை அடுத்து ஒரு தனிச்சொல். அதன்பிறகு நாற்சீரடி. அதன் பிறகு முச்சீரடி.

வாக்குண்டாம் நல்ல
மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி
நுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திருமேனி
தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

இதில் முதலடி நாற்சீரடியாக இருப்பது காண்க. அடுத்த அடி முச்சீரடியும், தனிச்சொல்லும் ஆனது அறிக. அதற்கு அடுத்த அடி நாற்சீரடி ஆனதறிக. கடைசி அடி முச்சீரடியாய் இருப்பதறிக.

வெண்பாவைப் பற்றி இவ்வளவு மட்டும் சொல்லி விட்டால் போதாது.

வாக்குண்டாம் என்பது முதலடி. அடுத்த அடி நோக் குண்டாம் என்று இருப்பதை நோக்க வேண்டும். அப்படி எதுகை வைத்துத் தொட்ங்க வேண்டும். இரண்டாம் அடியை **வாக்** என்பதற்கு **நோக்** என்பது எதுகையல்ல. **நோக்** என்பதுதான் எதுகை. முதலெழுத்து நெட்டெழுத் தாய் இருக்க வேண்டும். அடுத்த எழுத்து ௗக் என்றிருந்தால் அடுத்த அடியின் அடுத்த எழுத்தும் க் என்றே வரவேண்டும்.

''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு''

**எண், கண்** என எதுகை வந்திருப்பதைக் காண்க.

எண் என்பதற்குக் கண் எதுகையே தவிர காண் என்பதோ, க்ண் என்பதோ எதுகை அல்ல.

முதலடியும் இரண்டாம் அடியும் எதுகை உடையவை களாயிருந்தால் மட்டும் போதாது. தனிச் சொல்லும் எதுகை யுடையதாய் இருக்க வேண்டும்.

வாக்குண்டாம் நல்ல
மனமுண்டாம் மாமலராள்

நோக்குண்டாம் மேனி
நுடங்காது—பூக்கொண்டு

என்பதில் **வாக்–நோக்-பூக்** என எதுகை வருதல் காண்க. கடைசி இரண்டடிகளும் எதுகையோடு வட வேண்டும்.

''துப்பார் திருமேனி
தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு''

**துப்** என்றும் **தப்** என்றும் வந்தது காண்க.

நேரிசை வெண்பா என்பது நாலடி கொண்டது.

எடுத்துக்காட்டு:

தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயாற்சொற் கேட்பதுவும் தீதே—தீயார்
குணங்க ளுரைப்பதும் தீதே—அவரோ
டிணங்கி இருப்பதும் தீதே.

'குறள் வெண்பா' என்பது இரண்டடியில் வருவது.

எடுத்துக்காட்டு;

''எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு''

இன்னிசை வெண்பா என்பது நான்கு அடிபெற்றுப் பலவாறு வரும்.

எடுத்துக்காட்டு:

வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்
வைகலும் வைகல் வைகுமென் றின்புறுவார்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்.

இது ஒரே வகை எது, கையால் வந்த இன்னிசை வெண்பா. மேலும் இதில் தனிச்சொல் இல்லை.

இன்றுகொல், அன்றுகொல் என்றுகொல் என்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் தீயவை! ஒல்லும் வகையாம்
மருவுமின் மாண்டார் அறம்!

இது முதலிரண்டடி ஒரே எதுகையும் பின் இரண்டடி ஒரே எதுகையும் கொண்டு வந்தது. தனிச்சொல் இல்லை. இவ் வாறு பலவாறு வரும்.

இனி பஃறொடை வெண்பா பல அடிகள் கொண்டுவரும்

குறிப்பு: எழுதி வருவதை ஊன்றி நோக்கவேண்டும். முன் கூறியதைப் பின் மறத்தல் கூடாது. பாட்டுக்கு இலக்கணம் தெரிந்து கொள்ள வேண்டும். இன்றி யமையாதது.

குயில்—சென்னை—15.7.62.

* * *

## எழுத்துச் சிக்கனம்

உயிர் 12, மெய் 18, உயிர்மெய் 216, ஆய்தம் 1. இத்தனை எழுத்துக்கள் தமிழில் இருப்பதால் மிகத் தொல்லை யாய் இருக்கிறதென்று கூறுகிறார்கள்.

அவர்கள் கூறுவது சரிதான். எழுத்துக்களின் வரிவடி வத்தைக் குறைக்க வேண்டும் என்கிறார்கள். ஆம் என்று நாமும் கூறுகிறோம்.

வரிவடிவங்களைக் குறைக்க வேண்டிய முறையைப் பற்றி பலர் பலவாறு கூறுகிறார்கள். கூறுகிறவர்கள் எல்லாம் பொது நலங்கருதியே கூறுகிறார்கள். அதில் இம்மியும் ஐயமில்லை.

தமிழ் டைப்ரைட்டிங் மெஷினில் மிகப்பல எழுத்துக்கள் அமைக்க வேண்டியிருக்கிறது. அதனுல் அந்த மெஷின் மற்றவைகளைவிட மிகப் பெரிதாகி விடுகிறது. அச்சுக்கூடத்தில் எழுத்துப் பெட்டிகளின் அறைகளோ மிகமிக; ஒரு திண்ணையளவு பெரியதாக அமைய வேண்டியதிருக்கிறது.

கை, ளை என ஒரே இனத்தில் இரண்டு வகை. கை என்பது போலவே ளை என்றும் இருந்தால் என்ன முழுகி விடும்.

**க** இது குறில். **கா** இது நெடில். ஆனுல் **உ** இது குறில். **ஊ** இது நெடில். எத்தனை தொல்லை? **உ** குறில் **உா** நெடில் என்ருல் ஏன் பொருந்தாது?—இப்படிச் சிலர் கேட்கிருர்கள்.

**து** இது குறில். **தூ** இது நெடில் என்ருல் ஏன் பொருந்தாது—இப்படிச் சிலர் கேட்கிருர்கள்.

எழுத்தின் வரி வடிவத்தைச் சிக்கனப்படுத்து முறைப் பற்றி உங்கள் கருத்தென்ன என்று சிலர் நம்மைக் கேட்டார்கள்.

சொன்னேம். சொல்லுகிருேம். ஆயினும் நம் கருத்தை யாரும் ஒப்பமாட்டார்கள். ஒப்பமாட்டார்கள் என்பதற்காக நாம் சொல்லாமல் இருப்பதுண்டா?— கிடையாது.

நாம் சொல்லும் முறையைக் கையாண்டால் டைப் ரைட்டிங் மெஷினிலும் எழுத்துப் பெட்டி அறைகளிலும் 31 எழுத்துக்கள் போதும். ஒத்துக்கொள்ளுகிறவர்களின் நிலைமைதான் சரியில்லை.

**க** என்பது ஓர் எழுத்தல்ல. **க்** என்பதும் **அ** என்பதும் சேர்ந்தது **க.** இப்படியேதான் உயிர்மெய் 216ம்.

**பை** என்பது ஓர் எழுத்தல்ல. **ப்** என்பதும் **ஐ** என்பதும் சேர்ந்ததுதான் **பை.**

**க** என்று ஓர் எழுத்து வேண்டாம். **க் அ** என்றே குறிக்கலாம் என்கிறோம்.

கண்ணன் என்று எழுத வேண்டுமானல் **க் அண்ண் அன்** என்று குறிக்க.

**விசிறி** என்பதை **வ் இச் இற் இ** என்று குறிக்க வேண்டும். இந்த முறையை மேற்கொண்டால் உயிர் 12 மெய் 18. ஆய்தம் 1 ஆக 31 எழுத்துக்கள் போதும். எல்லாவற்றையும் எழுதிவிடலாம். இந்த 31 எழுத்தால், இப்படி எழுதுவதால் ஒரு வரியில் மிகப்பல எழுத்துக்கள் போடவேண்டும் என்று கூறலாம். அப்படியில்லை. சில எழுத்துக்களே அதிகமாகின்றன.

வழக்கத்தில் வருவது முடியாது என்று கூறலாம். வழக்கத்தில் வருவது இலேசு என்று தோன்றுகிறது.

அஃது பெரிது ஆயினும் எளிது என்பதை அஃத்உ ப்எர் இத்உ ஆய்இன்உம் எள்இத்உ என்று எழுதுக. சில நாட்கள் தொல்லையாக இருக்கும். பிறகு எளிதாகிவிடும்.

இங்கிலீஷிலும் பிரஞ்சிலும் இப்படித்தானே. **பு** என்பதை இங்கிலீஷில் pu என்று தானே போடுகிறான். பிரஞ்சிலோ அவளப்பன்! pou என்று மூன்று எழுத்துக்கள் போடவேண்டும்.

### உயிர் 12, மெய் 18, ஆய்தம் 1

ஆக 31 எழுத்தைக் கொண்டே எழுத்துக் குடித்தனத்தைச் சிக்கனப்படுத்தலாம் என்று கூறினோம்.

ஒரு தோழர் தெரிவிக்கிறார்:. நீங்கள் சொல்லிய வழி ஏற்றது. அதனோடு **ஆ** என்பதை **ஆா** என்றும் **ஈ** என்பதை **இா** என்றும்..... சுருக்கலாம் என்கிறார். செய்யலாம் என்கிறோம் அப்படியே.

அதன்படி

**ஈவது விலக்கேல்** என்பதை **இாவ் அத்உ வ்இல் அக்க்ளால்** என்று எழுதுக.

**கேள்வி : 1**

தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் இவைகள் போன்ற சொற்களைக் கொண்டு அகவல் எழுத வேண்டும். இவற்றிற்கு ஈரசைச் சொற்கள் என்று பெயர்.

இந்த ஈரசைச் சொற்கள் நான்கு கொண்டது. அகவலின் ஓர் அடி. அப்படி எத்தனை அடிகள் வேண்டுமானாலும் அமைக்கலாம். ஆனால் கடைசி அடி (வந்தே, வாழ்கவே என) ஏ என்று முடியவேண்டும். அன்றியும் ஈற்றடிக்கு முன் அடியில் மூன்று ஈரசைச் சொற்கள் மட்டும் இருக்க வேண்டும்.

நம்பி வந்தான் தந்தையார் வந்தனர்
செம்பு நிறைத் தேன்கொ ணர்ந்தார்
தினைமா வோடு சேர்த்தோம்
அனைவரும் உண்டோம் அகம கிழ்ந்தே

—இது நேரிசை அகவற்பா.

தேமா போன்ற ஈரசைச் சொற்கள்:—
தேர்பார், தென்பால், போனாய் என்று முதலியவை.

புளிமா போன்ற ஈரசைச் சொற்கள்:—
புதுத்தேர், நுணுக்காய், வராரோ முதலியவை

கூவிளம் போன்ற ஈரசைச் சொற்கள்:—
பார் அவர், என் அவா, ஏன்நடார் முதலியவை.

கருவிளம் போன்ற ஈரசைச் சொற்கள்:—
கடற்புனல், கடாநிறை, அடாதடா முதலியவை.

மேற்சொன்ன நேரிசை அகவற்பாவில் உள்ள ஒவ்வொரு ஈரசைச் சொற்களுக்கும், கீழே ஏற்ற தேமா முதலியவைகளை எழுத வேண்டும்.

(தம்பி வந்தான் தந்தையார் வந்தனர்.
தேமா தேமா கூவிளம் கூவிளம்)

செம்பு நிறையத் தேன்கொ ணர்ந்தான்
—— புளிமா தேமா தேமா

தினைமா வோடு சேர்த்தோம்
—— —— தேமா

அனைவரும் உண்டோம் அகம கிழ்ந்தே
—— —— புளிமா தேமா

விட்ட இடத்தை நிறைவு செய்க.

**கேள்வி : 2**

சாதி என்பதை தகர்க்க——————
தேமா

மதம் எனும் நினைவே——————வேண்டும்
தேமா

இவைகள் இருக்கும்——————
புளிமா

எவர் பொதுத் தொண்டும்——————இல்லையே
கருவிளம்

இந்த நேரிசை அகவற்பாவில் கோட்டுக்கு மேல் ஏற்ற சொல் அமைக்க.

**கேள்வி : 3**

தூயார்——————சூட்டுக் கொன்ற ''கை''
கூவிளம்

——————மனிதனின்——————அன்று
தேமா தேமா

மதமெனும்——————வலக்கை
தேமா

அதனால்―――――― ――――――கடனே

புளிமா புளிமா

கோட்டின் மேல் ஏற்ற சொல்லை எழுதுக.

தேர்தல் பெற்ற முதல் மூன்று வகையார்க்கும் முறையே 100க்கு 50, 100க்கு 30, 100க்கு 20 எனச் சேரும் தொகை பிரிக்கப்படும்.

முன்பு நாம் காட்டிய நேரிசை யாசிரியப்பாவைக் கண்டீர்கள். ஆசிரியப்பா என்பதும் அகவற்பா என்பதும் ஒன்றே. நேரிசை, ஆசிரியப்பா அல்லது நேரிசை அகவற்பா என்பதும் என்னவெனில், கடைசி அடிக்கு முதலடி முச்சீராய் வருவது.

இனி, அகவற் பாவுக்கோ, மற்றும் எந்தப் பாவுக்கோ, **மோனை** என்பது கருதப்படவேண்டும்.

'அண்ணல் காந்தியை அழித்தான் தீயோன்'

என்பது அகவலடி. இதில் **மோனை** என்பது என்னவெனில் ―அண்ணல் என்பதிலுள்ள **'அ'** என்ற எழுத்துக்கு மோனையாக அழித்தான் என்பதிலுள்ள **'அ'** வந்தது.

'அண்ணல் காந்தியார் ஆய்ந்து ணர்ந்தவர்'

இந்த அடியில், முதற்சீர் **'அ'** வுக்கு மூன்றுஞ்சீர் **'ஆ'** மோனையாக அமைந்தது.

'அண்ணல் காந்தியார் ஐயம் அகன்றவர்'

இந்த அடியில் முதற்சீர் **'அ'** வுக்கு மூன்றுஞ்சீர் **'ஐ'** மோனையாக வந்தது.

'அண்ணல் காந்தியார் ஔவியங் கொள்ளார்'

இந்த அடியில் முதற்சீர் **'அ'** வுக்கு மூன்றஞ்சீர் **'ஔ'** மோனையாக வந்துள்ளது.

எனவே, ஒவ்வோரடியிலும் முதற்சீர் 'அ'வில் துவக்கினுல் மூன்ருஞ்சீரில் அதற்கு மோனையாக **அ, ஆ, ஐ, ஔ** உடைய சொற்களில் ஒன்று வர வேண்டும். முதற்சீருக்கு மூன்றும் சீரில்தான் மோனை அமைய வேண்டும் என்பது சிறப்பு. இரண்டாஞ்சீரிலும் நான்காஞ்சீரிலும்கூட மோனை வைக்கலாம்.

கீழே, இன்னின்ன எழுத்துக்களுக்கு இன்னின் னஎழுத்துக்கள் மோனை என்பது குறிப்பிடப்படுகிறது:

| எழுத்து | மோனைகள் | எழுத்து | மோனைகள் |
|---|---|---|---|
| அ | அ, ஆ, ஐ, ஔ | ஊ | உ, ஊ, ஒ, ஓ |
| ஆ | அ, ஆ, ஐ, ஔ | ஒ | உ, ஊ, ஒ, ஓ |
| ஐ | அ, ஆ, ஐ, ஔ | ஓ | உ, ஊ, ஒ, ஓ |
| ஔ | அ, ஆ, ஐ, ஔ | ச | ச, த |
| இ | இ, ஈ, எ, ஏ | த | ச, த |
| எ | இ, ஈ, எ, ஏ | ஞ | ஞ, ந |
| ஏ | இ, ஈ, எ, ஏ | ந | ஞ, ந |
| உ | உ, ஊ, ஒ, ஓ | ம | ம, வ |
| | | வ | ம, வ |

மற்ற உயிர்மெய் எழுத்துக்களுக்கெல்லாம் உயிர் எழுத்துக்களுக்குச் சொன்னபடியே.

கீழ்வரும் செய்யுளில், கோடிட்ட இடங்களை ஏற்ற சொல்லால் நிறைவு செய்க.

''காந்தியைக் கொன்றவன்————வழியே.
சாய்ந்திடுகின்றனர்————யாவரும்
என்று நடுங்க————திராவிடர்
வன்மனங் கொண்ட————நாதரின்
குதிப்பால் எம்திறல் குறையா————அன்றே
கொதிப்பால் இயக்கம்————வெற்றி
செய்மையில் இல்லை————
அண்மையில் என்று————
திண்மையில் முழங்குக————திடவே.''

இலக்கியப் போட்டி—4

கட்டமை வில்லாக் காங்கிரஸ் கட்சிச்————
சட்டமன் றுறுப்பின் தலைவர்————
பைத்தியங் கொண்ட————
வைத்திய நாதரின் வஞ்சச் சூழ்ச்சி
பலிக்க வில்லை! பச்சைத் திராவிடப்
—வெற்றி போந்தது. வைத்திய
நாதர் கண்டார் நாணவில்லை.
தோதுறு திராவிடர், சுப்பரா யனையும்
தீமை யில்லாக்———— ————
ஓமந் தூர்இ ராமசா மிக்குப்
———— ஆக்கப் பார்த்தார்
வகையிலாச் சூழ்ச்சியும்———— ————.

கோடிட்ட இடத்தில் ஏற்ற சொற்களை அமைக்க!

## 3வது இலக்கியப் போட்டி

### சரியான விடை

''காந்தியைக் கொன்றவன் **கருத்தின்** வழியே
சாய்ந்திடு கின்றனர் **தலைவர்** யாவரும்
என்று நடுங்க **வில்லை** திராவிடர்
வன்மனங் கொண்ட **வைத்திய** நாதரின்
குதிப்பால் எம்திறல் **குறையா** துள்ளக்
கொதிப்பால் இயக்கம் **கொழுக்கும்** அன்றே
சேய்மையில் இல்லை **திராவிடர்** வெற்றி
அண்மையில் என்று **முரசே**
திண்மையில் முழங்குக **திசையதிர்ந்** திடவே

## இலக்கியப் போட்டி—5

### எதுகை

'முதலெழுத்து ஒன்றி வருவது மோனை' என்பது முன்னர் அறிவிக்கப்பட்டது. இப்போது எதுகையைப்பற்றி அறிவிப் போம்.

எந்தப் பாவிற்கும் எதுகை அமைந்திருப்பது அழகும் சிறப்புமாகும்.

'அண்ணல் காந்தியார் நுண்ணிய அறிவினர்' என்பது அகவலடி. இதில் அண்ணல், நுண்ணிய என்பவற்றின் இரண் டாம் எழுத்தாக ண் என்பது ஒன்றி வந்துள்ளது.

இங்ஙனம் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவதற்கே எதுகை என்று பெயர். ''போந்த காந்தி ஈந்த உரிமை'' என ஓரேயடியில் பல எதுகைவரின் மிகச் சிறப்பு.

'காந்தி தமது கட்டுரை வழியே
மாந்தர் நடப்பது மாபெருஞ் சிறப்பு'

எனும் இரண்டடிகளின் முதலிலுள்ள காந்தியார், மாந்தர் என்பவற்றின் இரண்டாம் எழுத்தாக 'ந்' என்பது ஒன்றி வந்துள்ளது. இங்ஙனம் இரண்டு முதலிய பல அடிகளிலும் எதுகை ஒன்றி வரும். அடிதோறும் ஒன்றிவரின் மிக மிகச் சிறப்பு.

'வடவரின் வருகையால் வண்டமிழ் மக்களின்
நடைமுறை மாற்றம் நண்ணிய திங்கே'

இதில் வட, நடை என இரண்டாம் எழுத்தாக, ட, டை என்னும் டகர வரிசை ஒன்றி வந்துள்ளது. இங்ஙனம் ட,டா, டி, டீ—ம, மா, மி, மீ எனவரும் ஒருவரிசை எழுத்துக் குள்ளேயே எதுவும் வந்து ஒன்றலாம். இதற்கு 'வருக்க எதுகை' என்று பெயர்.

'நுண்ணிய ஆரியம் நலிவு செய்ததால்
மன்னிய நந்தமிழ் மாண்பு குறைந்தது'

இதில் நண், மண், என இரண்டாம் எழுத்தாக ண், ன், என்னும் மெல்லின எழுத்துக்கள் ஒன்றி வந்துள்ளன. இங்ஙனம் வெவ்வேறு மெல்லின எழுத்துக்களோ அல்லது வெவ்வேறு வல்லின எழுத்துக்களோ,வெவ்வேறு இடையின எழுத்துக்களோ தம்முள் ஒன்றி வருதலும் உண்டு. இதற்கு 'இன எதுகை' என்று பெயர்.

மேலும் 'பாட்டு' என்பதற்கு எதுகையாகக் 'கட்டு' என வருதல் கூடாது. காட்டு எனவே வரவேண்டும். இம்முறையில் எதுகையமைத்துக் கீழ்வரும் ஆசிரியப்பாவில் கோடிட்ட இடங்களை நிறைக்க.

இந்தி வேண்டாம்! வித்துவான்—சண்முகன்
ஆரியம் வந்தது! ஆங்கிலம் வந்தது!
—————— நந்தமிழ் நிலைமை குறைந்தது
கோயிலில் ஆரியர் ——————புக்கனர்
—————— மணத்திலும் நுன்னினர் அவரே!
—————— ஆண்டதால் அலுவல் களிலெல்லாம்
நுண்ணிய தாங்கில நாட்டு மொழியே
—————— —————— இதே நிலை!
வந்து காப்பீர் வளர்திரா விடரே!

4வது இலக்கியப் போட்டி
சரியான விடை

கட்டமை வில்லாக் காங்கிரஸ் கட்சிச்
சட்டமன் றுறுப்பின் தலைவர் **தேர்தலில்**
பைத்தியங் கொண்ட **பார்ப்பன ரான**
வைத்திய நாதரின் வஞ்ச சூழ்ச்சி
பலிக்கவில்லை. பச்சைத் திராவிடப்
**புலிக்கே** வெற்றி போந்தது. வைத்திய
நாதர் கண்டார் நாணவில்லை
தோதுறு திராவிடர், சுப்பரா யனையும்
தீமையில்லாக் **காமரா சரையும்**
**பகைவர்** ஆக்கப் பார்த்தார்
வகையிலாச் சூழ்ச்சியும் **மண்ணு யிற்றே.**

## 5-வது இலக்கியப் போட்டி

### சரியான விடை

இந்தி வேண்டாம்! வித்வாவான் சுந்தர-சண்முகன்
ஆரியம் வந்தது! ஆங்கிலம் வந்தது!
**நேரிய** நந்தமிழ் நிலைமை குறைந்தது
கோயிலில் ஆரியர் வாயிலாய்ப் புக்கனர்
**தூய** மணத்திலும் துன்னினர் அவரே!
வழுத்தும் தமிழின் வனப்பம் குன்ற
எழுத்திலும் பேச்சிலும் **நுழைத்தனர்** பிறமொழி
அன்னியர் ஆண்டதால் அலுவல் களிலெல்லாம்.
**இந்தி வந்தாலும்** இதேநிலை?
வந்து காப்பீர் வளர்திரா விடரே!

[ முற்றும் ]

# நீதிதேவன் மயக்கம்

(நாடகம்)

**பேரறிஞர் டாக்டர் சி.என். அண்ணாதுரை**

'இதிகாசம்' என்னும் இருளால் புதையுண்டு போயிருந்த தமிழ்ச் சமுதாயத்தைப் புதுப்பிக்க, பொய்யை மெய்யாக்கி வாழ்ந்த ஓர் இனத்தின் ஆழமான சதியை அம்பலப்படுத்த, அமரர் அண்ணா அவர்கள் வழங்கிய மனோரஞ்சித மலர் இது.

கம்பராமாயணத்திலுள்ள குற்றம் குறைகளை இலங்கேஸ்வரன் மூலமாகக் கேட்டு, தீர்ப்பளிக்க முடியாமல் தடுமாறித் தலைசாய்க்கும் நீதி தேவனை இந் நாடக நூலில் காணலாம்.

இதுமட்டுமல்ல....அதே மாதிரியான பல்வேறு நிறமுள்ள—மணமுள்ள ஓரங்க நாடகங்களை உள்ளடக்கிக் கொண்டுள்ள இந்நூல், ஒவ்வொருவர் கரத்திலும் நிச்சயம் இருக்க வேண்டிய கலைக்களஞ்சியம்!

**விலை ரூ. 5-90**

பூம்புகார் வெளியீடு

# இரு பரம்பரைகள்

*(சிறுகதைகள்)*

**பேரறிஞர் டாக்டர் சி. என். அண்ணாதுரை**

*சமூகத்தில் இன்றளவும் தீர்க்கப்பட முடியாமல் இருக்கின்ற பல்வேறு பிரச்னைகளை அடையாளம் காட்டுவது அல்லது அவைகளை நீக்குவதற்கான பரிகாரம் காண்பது என்பது எல்லோராலும் முடியாத ஒன்று. அதுவும், 'சிறுகதை'யின் வாயிலாகத் தெரியப்படுத்துவது அல்லது அதைப் படிப்போரைத் தெளிய வைப்பதென்பது அவ்வளவு சுலபமான விஷயமல்ல; மிகப் பெரிய ஒரு கலையாகும்.*

*அந்தக் கலையில் புதுவழி கண்ட பெருமை பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு நிரம்ப உண்டு. 'சட்'டென்று கிளம்பி, 'பொட்'டென்று தளரும் இக்கால வெறியுணர்ச்சிக் கதைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட முத்தான—முகம் பார்க்கும் கண்ணாடிபோல் பயன்படும் சத்தான கதைகளின் தொகுப்பு நூல் இது.*

**பூம்புகார் பிரசுரம் பிரஸ்**
**63, பிராட்வே,**
**சென்னை-600 001.**



பாரதிதாசன்

பாரதிதாசன் எதையும் ஆவேசத்தோடும், உணர்ச்சியோடும் பாடுபவர். கவிஞரின் சிந்தனையும் மொழியும் வாழ்க்கையை விரிவாக்குவன. கற்பனையும் யதார்த்தமும் கலையின் தொண்டுக்குப் பகுத்தறிவின் வழிக் கொண்டு வருபவர்.

பாரதி, பாரதிதாசனுக்குப் பழகு தமிழின் பண்பைக் காட்டினார். பாரதிதாசன் பழகு தமிழின் பாட்டில் பாட்டாளிகட்கும் உலக மக்கட்கும் சிந்தனைக்கனலை மூட்டினார். கலையை வாழ்க்கையின் வழிகாட்டியாக்கிய பெருமை புரட்சிக் கவிஞருக்கே உண்டு.

காதல், இயற்கை, சமூகம், பொதுவுடைமை எல்லாமே கவிஞரின் மொழியில் புத்துருக் கொள்கின்றன.

T18
R004